விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex
www.vijeaycomplex.com



உங்கள் அனைத்து மங்கள நிகழ்வுகளையும்
கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத்
தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthural Road, Jaffna.
(7581)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 22 சனிக்கிழமை (07.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 231

## கொரோனா
## யாழ் - 66
## வடக்கு - 95

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 66 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 95 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. ▷19

## கொரோனா
## +2,792

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 2792 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 324.221 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# நாடு முடங்காது

## திருமணங்கள், மரணச் சடங்குகளுக்கான புதிய கட்டுப்பாடுகள் அமுல்



(கொழும்பு)
நாடளாவியரீதியில் முடக்கம் எதுவும் அமுல்படுத்தப்படாது என ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனா நிலைமை தொடர்பான முக்கிய கலந்துரையாடலில் தீர் மானிக்கப்பட்டுள்ளது.
எனினும் திருமணங்கள், மரணச் சடங்குகளுக்கு புதிய கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.
நாட்டில் நிலவும் கோவிட் -19 நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடைபெற்ற முக்கியமான கலந்துரை ▷19

## கடந்த மாதத்தில் நாடு பூராகவும் 120 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன

### கொரோனா பரவலுக்கு இதுவே காரணம்
### ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)
சுகாதாரப் பரிந்துரை களை பின்பற்றாமல் பொது மக்கள் ஒன்றுகூடுவதா லேயே நாடு பூராகவும் கொரோனா தொற்று வேக மாக பரவுவதற்கு காரண மாக அமைந்ததாக புல னாய்வுத் துறையினர் சுட் டிக்காட்டினர்.
கோவிட் தடுப்பு விசேட குழுவு ▷19

## கோவிட் பலி
## 100 - 2

(கொழும்பு)
நாட்டில் மேலும் 98 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக நேற்று அறிக்கையிடப்பட் ▷19

## வெளிநாடு செல்வோருக்கு பைசர் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)
வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்காக அல்லது கல்வித் தேவைக்காக செல்வோ ருக்கு பைசர் தடுப்பூசி வழங்கப் படும் என மாகாண சுகாதார பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது. ▷19

## கட்டுப்பாட்டை கடுமையாக்காவிட்டால் இரு வாரங்களில் நிலைமை கைமீறலாம்

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)
கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் விதிக்காவிட்டால் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் என்று இலங்கை பொது சுகா தார பரிசோதகர்கள் ▷19

## கோட்டாவிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது

### சபையில் ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)
நாட்டைப் பாதுகாக்கவெனக் கொண்டுவரப்பட்ட .வீரரிடம் இருந்து இப்போது நாட்டைப் பாது காக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஹரின் பெர் னாண்டோ தெரிவித்தார்.
பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற் றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் ▷19

## காட்டு ஆட்சியாளர்கள் போல அரசின் செயற்பாடு

### அனுரகுமார திஸாநாயக்க சபையில் கடும் அதிருப்தி



(கொழும்பு)
ஆர்ப்பாட்டங்களை மேற்கொள் வோர், பொலிஸாரால் கைது செய் ▷19

களுத்துறையில் 24 மணி நேரமும்

## அனைத்து சுடுகாடுகளையும் திறந்து வைக்க தீர்மானம்

(கொழும்பு)
கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள தால் களுத்துறை மாவட்டத்தி லுள்ள அனைத்து சுடுகாடு களையும் 24 மணி நேரமும் திறந்து வைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ம-3)

முல்லை கைவேலியில்

## தற்காலிக வீடு எரிந்து நாசம்

(குருமன்காடு)
முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட கைவேலிப் பகுதியில் நேற்று [illegible] ▷19

## மக்கள் போராட்டத்தை அரசால் தடுக்கமுடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
ஜனநாயகத்திற்காகப் போராடு பவர்கள் மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.
இலவசக் கல்விக்காகப் போராடிய மாணவர் ▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி கஜேந்திரராணி
குகதாசன் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
**சின்னையா**
**வேலாயுதம்**
அவர்கள் 04.08.2021 அன்று
இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(7583)

ஆழ்ந்த துயருடன்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# கொரோனா நெருக்கடியை கருத்திற் கொண்டு சமூக முன்னோடிகளாக நடந்துகொள்வோம்

### அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவுகின்ற கொரோனாத் தொற்றின் அபாயகரமான சூழ்நிலையிலும் ஆசிரியர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையைத் தொடர்ந்து வழங்கி மக்களின் நன்மதிப்பை பேணவேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்த விஷேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறைவன் திருப்பணிக்குச் சமனான பணியை மேற்கொள்ளும் நாம் சமூகத்தில் உயரிய அந்தஸ்து உள்ளவர்களாக இருக்கின்றோம். தற்போதைய சூழ்நிலையிலும் எங்களால் முடிந்ததை எதிர்கால சந்ததிக்காக வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

இன்று எம்மில் எண்பது வீதமானவர்கள் பெண் ஆசிரியர்களாக இருப்பதனை யாவரும் அறிவர். அவர்களுக்கு இரட்டிப்புச் சுமைகள். பெற்ற குழந்தைகளையும் நம்பிவந்த குழந்தைகளையும் சமமாகப் பார்க்கும் பக்குவம் அவர்களுக்கே உரித்தானது. அதிலும் தமிழ் பேசும் பெண் ஆசிரியர்கள், சமூகத்தில் உயரிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்களாக உள்ளனர் என்பதனை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலைகளால் அனைவருமே மரண பயத்தில் உள்ளனர். இச்சமயத்தில் ஆசிரியர்களாகிய நாமே அறிவு சார்ந்தவர்களாக, மக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

அதே நேரம் நாட்டில் உள்ள அனேக அரச அலுவலகங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது.

நேற்று மட்டும் நூற்று எழுபத்தேழு டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் கல்வி அமைச்சு வறிய மாணவர்களுக்கு உருவாக்கிய கற்றல் வள நிலையம் கேள்விக்குறியாகியுள்ளது.

இத்தகைய நிலைகளில் ஒட்டுமொத்த மக்களும் ஆசிரியர்கள் மீது குறைகூற ஆரம்பித்துள்ளனர். இவற்றை நிவர்த்தி செய்ய, சமூக முன்னோடிகளாக நாம் நடந்து கொள்வோம். சாதாரண மக்களின் மனதில் வெறுப்பு ஏற்படாத வகையில் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ம-03)

## இந்து பௌத்த கலாசார பேரவையின் இரண்டாம் கட்ட சான்றிதழ் வழங்கும் வைபவம் (06.08.2021)



இந்து பௌத்த கலாசார பேரவையின் சான்றிதழ் வழங்கும் வைபவம் இரண்டாம் கட்டமாக 06.08.2021 அன்று இடம்பெற்றது. இவ்வைபவமானது இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் கௌரவ. S.M. சமன் பந்துலசேன அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்தியதோடு தொடர்ந்து உரையாற்றுகையில் இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரனின் 2ஆம் மொழி கற்பித்தல் நடவடிக்கைகளை பாராட்டி எதிர்காலத்திலும் வடமாகாண இளைஞர், யுவதிகளின் வளர்ச்சிக்கு பங்காற்றுமாறு வேண்டுகோள் விடுத்தார். அத்தோடு வடமாகாண கிராமப்புறங்களின் முன்னேற்றத்திற்கு தான் விசேட கவனம் செலுத்துவேன்,எனவும் உறுதியளித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் திரு. பந்துல ஹப்புத்தந்தி மற்றும் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் திரு. றஞ்சித் கொட்டியாராச்சி அவர்களோடு அதிபர் சங்க செயலாளரும் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியின் அதிபருமான திரு.சி.திரிதரன் மற்றும் வரணி மத்திய கல்லூரி அதிபர் பரம்சோதி செல்வவிநாயகம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் வரணி மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பில் உரையாற்றிய வரணி மத்திய கல்லூரி அதிபர் பரம்சோதி செல்வவிநாயகம் அவர்கள் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் அவசியம் என மொழியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவையிலிருந்து கற்று வெளியேறிய 23,000 மாணவர்கள் சார்பில் இப்பேரவையின் கற்றல் கற்பித்தல் ஆலோசகர் ம.சுமெக்சன் அவர்கள் வடமாகாணத்தின் பிரதம செயலாளர் கௌரவ. சமன் பந்துலசேன ஊடாக வடமாகாணத்திற்கு ஆளுனராக சேவையாற்ற மிகப் பொருத்தமானவராக தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்படவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்தார். அத்துடன் இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் வருகின்ற7.8 மற்றும் 9 ஆம் திகதிகளில் வடமாகாணத்தின் பல உயர்மட்ட அரச அதிகாரிகளின் பங்குபற்றலுடன் சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது தொடர்ந்து இடம் பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

அத்தோடு இதுவரை சான்றிதழ் பெறாத மாணவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுசெய்து சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்

**தொலைபேசி இலக்கம் : 076 028 2693**

ந.தவராஜா
உதவிச் செயலாளர்
இந்து பௌத்த கலாசார பேரவை

(7587)

# யாழில் 30 வயதுக்கு மேற்பட்ட 75 சதவீதமானோர் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 75 சதவீதமானோர் கோவிட்-19 தடுப்பூசியின் ஒரு டோஸைப் பெற்றுள்ளனர்.

நேற்றுடன் 30 வயதுக்கு மேற்பட்ட 2 இலட்சத்து 61 ஆயிரத்து 112 பேர் கோவிட்-19 தடுப்பூசியில் ஒரு டோஸைப் பெற்றுள்ளனர். இந்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். மேலும் 50 ஆயிரம் பேருக்கு அடுத்த வாரம் இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு இலட்சம் பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அவர்களில் 50 ஆயிரம் பேர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். தற்போது 3 ஆம் கட்டமாக இரண்டு இலட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் 9ஆவது நாளும் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ரீதியாக 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது. நேற்றைய 9ஆவது நாளில் 14 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் மற்றும் வைத்தியசாலைகளில் என 7 ஆயிரத்து 866 பேர் கோவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளனர்.

(ம-03,33)

# கோவிட் தொற்றாளர்களை சங்கடப்படுத்த வேண்டாம்

### சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கொரோனா நோய்த்தொற்றின் அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளுக்கு வருகின்ற எந்தவொரு நோயாளியும் சங்கடத்துக்கு உள்ளாவதற்கு இடமளிக்க வேண்டாமென, சுகாதாரப் பிரிவு பிரதானிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகள் காரணமாக, கொழும்பு உள்ளிட்ட சில பிரதான நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு வருகை தருகின்ற நோயாளர்களின் நோய்த்தொற்றை உறுதி செய்துகொள்ளும்போது ஏற்படுகின்ற நெரிசல் காரணமாக, அவர்கள் சங்கடங்களுக்கு ஆளாகக்கூடாதென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சில பிரதான நகரங்களுக்கு அண்மையில், மேலதிக சிகிச்சை நிலையங்கள் பலவும், கடந்த மாதங்களுக்கு முன்னரே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு அவசர நிலையிலும் தொற்றாளர்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்காகவே அந்நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நோய்த்தொற்று அறிகுறிகள் காணப்படுகின்றவர்கள், முதலாவதாக மேலதிக சிகிச்சை நிலையங்களுக்கும் பின்னர் நோயாளியின் நிலைமையை அவதானித்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

(ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு மரணங்கள் அதிகரிக்கலாம்

# சுகாதார துறையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனா தொற்றாளர்கள் துரிதமாக அதிகரித்து வரும் நிலையில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர்.**

இந்த நிலைமையை தடுப்பதற்காக மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

நோய் தொற்று ஏற்பட்டு மூன்று வாரங்களின் பின்னர் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், வைத்தியசாலைகளில் மேலும் கொரோனா சிகிச்சை விடுதிகளை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# ரஞ்சனுக்கும் தொற்று



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. (நி-5)

## நாட்டில் இதுவரையில் 117 பேருக்கு டெல்டா தொற்று உறுதி

(கொழும்பு)

கொரோனா வைரஸின் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 117 ஆக அதிகரித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான கொரோனா பரிசோதனைகளில் டெல்டா திரிபுடன் மேலும் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கொரோனா வைரஸின் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 117 ஆக அதிகரித்துள்ளது. (நி-5)

# ஆபத்தில் மேல் மாகாணம் முடக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் கொவிட் பரவல் தீவிரம் அடைந்துள்ள நிலையில் முடக்க நிலையை அறிவிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலங்கை மருத்துவ சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து இலங்கை மருத்துவ சபையினால் இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் வைத்தியசாலைகளின் தீவிர சிகிச்சை பிரிவுகளும் சாதாரண விடுதிகளும் கொவிட் தொற்றாளர்கள் நிறைந்து காணப்படுகிறது.

இந்த சூழலில் கொவிட் தொற்றாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கு பொருத்தமான மருத்துவ வசதிகள் குறைந்த மட்டத்தில் உள்ளதெனவும் தற்போது வேகமாக கொவிட் வைரஸ் பரவுவதற்கு டெல்டா மாறுபாடு காரணமாக இருக்கலாம் எனவும் இலங்கை மருத்துவ சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது மேல் மாகாணத்தினுள் வேகமாகப் பரவும் டெல்டா மாறுபாடு மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவும் அபாயம் உள்ளதென சங்கத்தின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் பயணக்கட்டுப்பாடுகளை நீக்குதல், சமூக நிகழ்வு இடங்களை திறந்து வைத்தல், பொது போக்குவரத்தில் சுகாதார தன்மை, மதஸ்தலங்களை திறந்து வைத்தல் மற்றும் அலுவலகங்களை வழமையைப் போன்று நடத்திச் செல்லுதல் போன்ற விடயங்கள் தற்போதைய கொவிட் பரவலுக்கு முக்கிய காரணமாகியுள்ளதென இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளது. (நி-5)

## கடவுச் சீட்டு விநியோகம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சாதாரண சேவையூடாக கடவுச்சீட்டு விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவசர தேவை காணப்படும் பயனாளர்களுக்கு ஒரு நாள் விசேட சேவையூடாக கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

பத்தரமுல்லை தலைமையகத்தில் கடமையாற்றிய ஊழியர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# அத்தியாவசியமானவர்களை மட்டும் வேலைக்கு அழையுங்கள்

## இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

அரச அலுவலகங்களுக்கு சேவைக்காக அத்தியாவசியமானவர்களை மாத்திரமே அழைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரவுள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் அலுவலகங்களில் அதிகபட்சமாக இருக்க கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை அதன் பிரதானியே தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை செப்டம்பர் மாதம் முதலாம் திகதி வரையில் அனைத்து அரச நிகழ்வுகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## கொவிட் தொற்றால் முதலாவது பழங்குடியினத்தவர் பலி

(கொழும்பு)

நாட்டில் பழங்குடியினர் மத்தியில் முதலாவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பழங்குடியினத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், தம்பானே பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என பழங்குடியினரின் தலைவர் ஊருவரிகே வன்னிலஎத்தன் தெரிவித்துள்ளார். அவருக்கு நீண்டகாலமாக பல நோய் நிலைமைகள் காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## மேலுமொரு தொகுதி சினோபார்ம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன

(கொழும்பு)

மேலுமொரு தொகுதி சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. அதன்படி 2.14 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று வெள்ளிக்கிழமை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானுக்கு நேர்த்திக்கடன் செலுத்த அனுமதி இல்லை

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவில் ஆலய பூசகர்கள், தொண்டர்கள், உபயகாரர்கள் உட்பட 100 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய இடங்களில் இருந்து வருகை தருவோருக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது என சுகாதார தரப்பு அறிவித்துள்ளது.

காவடி, பாற்செம்பு உட்பட நேர்த்திக் கடன்களை செலுத்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விசேடபேருந்து சேவை, அன்னதானம், தாகசாந்தி என்பவையும் இடம்பெற மாட்டாது. மேலும் ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ளும் அனைவரும் முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன், சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்துச் செயற்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 கி.மீ. நடைப் பந்தயம் போலந்து வீரருக்கு தங்கம்

20 கி.மீ. நடைப்பந்தயத்தில் தங்கம் வெல்வதையே குறிக்கோளாக கொண்டிருந்த போலந்து வீரர், 50 கி.மீ. நடைப்பந்தயத்தில் பங்கேற்ற 2ஆவது போட்டியிலேயே தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை ஆண்களுக்கான 50 கி.மீ. நடைப்பந்தயம் நடைபெற்றது. இதில் இந்தியா சார்பில் குர்ப்ரீத் சிங் பந்தய தூரத்தை முடிக்க முடியாமல் போட்டியில் இருந்து வெளியேறினார்.

இந்த போட்டியில் போலந்து வீரர் தாவித் டோமாலா பந்தய தூரத்தை 3 மணி 50 நிமிடம் 8 விநாடிகளில் (3:50:08) கடந்து தங்கப்பதக்கம் வென்றார். ஜேர்மனிவீரர் ஜோனாதன் ஹில்பெர்ட் 3 மணி 50 நிமிடம் 44 விநா டிகளில் கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். கனடா வீரர் எவன்டன் 3 மணி 50 நிமிடம் 59 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் வென்றார். இதில் தங்கப்பதக்கம் வென்ற போலந்து வீரர், அவரது வாழ் நாளிலேயே இதற்கு முன் ஒரு முறைதான் 50 கி.மீ. நடைப்பந்தயத்தில் கலந்து கொண்டுள்ளர். தற்போது 2 ஆவது முறையாக கலந்து கொண்டு தங்கப்ப தக்கம் வென்றுள்ளார். (4-6)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா - பகுதி II

## 16.09.2021, 17.09.2021 மற்றும் 18.09.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 16.09.2021, 17.09.2021 மற்றும் 18.09.2021ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா - பகுதி II நடைபெறவுள்ளது.

பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா -பகுதி II இல் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 16.08.2021ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் www.jfn.ac.lk இனைப் பார்வையிடவும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி - 2020
4. சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி - 2020
5. கல்வியியலில் முதுமாணி - 2020
6. முதுவியாபார நிர்வாகமாணி - 2018
7. முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் -2018
8. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் -2020
9. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2021
10. விஞ்ஞானமாணி (பொது) - 2018
11. கலைமாணி (சிறப்பு) - 2018
12. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) - 2018
13. சட்டமாணி - 2019
14. வியாபார நிர்வாகமாணி (சிறப்பு) - 2018
15. வணிகமாணி (சிறப்பு) - 2018
16. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2019
17. பொறியியல் விஞ்ஞானமாணி - 2019

**வவுனியா வளாகம்**

1. தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி - 2018
2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி - 2018
3. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
4. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது) - 2018
5. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) - 2018
6. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 2018
7. வியாபார முகாமைத்துவமாணி - 2018
8. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2018
9. வியாபார முகாம்மைத்துவமாணி கணக்கீடும் நிதியும் - 2018
10. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2018
11. வணிகப் பொருளியலில் வியாபார முகாமைத்துவமாணி - 2018
12. மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2018

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை 16.08.2021 இற்கு முன்னர் நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும்போது ஒவ்வொரு ஆவணமும் 2MB இற்கு மேற்படாது 'Jpeg' அல்லது 'jpg' முறை வடிவில் இருத்தல் வேண்டும்.

1. பற்றுச்சீட்டு
2. பட்டச் சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பம்
3. அண்மைய புகைப்படம் (கடவுச்சீட்டு அளவு 35 mm X 45 mm மெல்லிய நீல வெற்று பின்புலத்தில்)

நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை தரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 16.08.2021ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"35ஆவது பட்டமளிப்பு விழா - பகுதி II, வேண்டுகோள் படிவம்"** எனக் குறிப்பிடவும்.

**அஞ்சல் முகவரி**
உதவிப் பதிவாளர் / அனுமதிகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். வங்கிப் பற்றுச்சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | |
|---|---|---|
| **கட்டணம்** | **இளமாணிப்பட்டதாரிகள்** | **பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள்** |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 750 | 2000 |
| பட்டமேலங்கிக் கட்டணம் | 750 | 1000 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 700 | 1000 |
| புகைப்படக் கட்டணம் | 600 | 600 |
| **மொத்தக் கட்டணம்** | **2800** | **4600** |
| **மக்கள் வங்கிகணக்கிலக்கம்** | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 |
| **சமுமளிக்காதவர்** | 970000052100340 | 970000082100351 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச்சீட்டில் குறிப்பிடவும். மேற்குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.

குறிப்பு: பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச்சான்றிதழைப் பெறவிரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத்தேவையில்லை.

**3. பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆவணக் காப்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப் படாதிருந்தால் அவ்விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு 021 222 6714 அல்லது admissions@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 16.08.2021**

**பதிவாளர்**

(C2073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரிக்கும் டெல்டா பிறழ்வு

# வீட்டு தனிமைப்படுத்தல் முறைமை ஆரம்பம்- சுகாதார அமைச்சு

(கொழும்பு)

**நோய் அறிகுறிகளற்ற, அபாய நிலையில் இல்லாத கொரோனா நோயாளர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்தும் நடவடிக்கையை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

மருத்துவ கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என நேர்காணலில் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் ஏற்கனவே இந்த திட்டம் நடைமுறையில் உள்ளதுடன், நாடளாவிய ரீதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

வீட்டில் உள்ள நோயாளர்களுடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஆலோசனை வழங்கும் வகையிலான திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வீட்டு தனிமைப்படுத்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல் கோவை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் நெருக்கடி காரணமாக, வீட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

டெல்டா பிறழ்வு சடுதியாக பரவும் நிலையில், வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்களுக்கு மேலதிகமாக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கொழும்பில் பதிவாகியுள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு டெல்டா பிறழ்வு ஏற்பட்டுள்ளமை, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஒவ்வாமை, நிர்ப்பீடனம், உயிரணு தொடர்பான பிரிவு எழுமாறாக மாதிரிகளைத் தெரிவு செய்து முன்னெடுத்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சிறந்தது எதுவெனக்கூற முடியாது

### தடுப்பூசி குறித்து சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

தடுப்பூசிகளின் தரம் குறித்து இறுதி யாக்கப்பட்ட தரவுகள் என எதுவுமே இல்லை. அனைத்துமே தற்போதும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் எது சிறந்த தடுப்பூசி யென தெரிவு செய்ய முடியாது என சபையில் தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இலங்கையில் பரவிக் கொண்டுள்ள சகலவிதமான கொரோனா வைரஸ்களுக்கும் தற்போது நாம் பயன்படுத்தும் தடுப்பூசிகள் அனைத்துமே பலனளிப்பதாக சுகாதார நிபுணர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை பதில் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் தெற்காசிய வலயத்தில் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரிப்பு நிலையொன்றே காணப்படுகின்றது. அதேபோல் இலங்கையிலும் வைரஸ் தொற்றாளர் அதிகரிப்பை காட்டுகின்றது.

கடந்த வாரத்தில் இருந்து மீண்டும் இரண்டாயிரத்தை தாண்டிய வைரஸ் தொற்றாளர்கள் நாளாந்தம் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

ஆனால் எப்போது இன்னொரு வைரஸ் அலை உருவாகும் என கூற முடியாது. தடுப்பூசி ஏற்றிக் கொள்வதன் மூலமாக மட்டுமே கொரோனா அலை ஏற்படு வதை தவிர்க்க முடியும் எனவும் பவித்ரா தெரிவித்தார். (நி-5)



கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்கான சர்வதேச தினத்தையொட்டி 242 ஆவது பிரிகேடின் கீழ் உள்ள இலங்கை தேசிய பாதுகாப்பு படையணியின் படையினரால் அம்பாறையில் உள்ள உமிரி உவர்நீர் பகுதியை சுற்றி 200 கண்டல் தாவரங்கள் நடும் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.


12 ஆவது நினைவாண்டும்
32 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

ஆண்டுகள் பல கடந்தாலும் அக்கா உங்கள் நினைவு
மறையுமா... மறந்திடுமா... காலம் எல்லாம் என்னோடு
பாச மழை பொழிந்து வாழ்வீர்கள் என நான் ஆனந்தமடைய
பாதியிலே எனை விட்டு போனதேனோ...
நீங்கள் இல்லாத வாழ்வு வெறுமையாகிக் கிடக்குதே
என் மகிழ்வுகள் எல்லாம் சோகமயமாகிப் போனதே...
ஆண்டுகள் எத்தனை ஓடி மறைந்தாலும்
உங்கள் எண்ணம் எனை விட்டு மறையாது.
உங்கள் ஆத்மா சாந்திக்காய் தினமும் இறைவனைப்
பிரார்த்திக்கிறேன்.





அமரர்.
சிறினிவாசன் சுபோதினி
மலர்வு 1989.08.07
உதிர்வு 2009.01.19

4 ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

அன்புடன்,
அம்மா, அப்பா,
தம்பி, அண்ணாமார்.

(7582)


## வங்கிக்கு சென்ற பெண் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச் சேனையில் உரப்பையில் வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை நகரில் அலங்கார மீன்கள் மற்றும் அலுமினிய பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்றில் இருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த விற்பனை நிலையத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட சந்தேகத்திற்கிடமான உரப்பைகளில் ஒன்றில் இருந்து உரமும் மற்றைய மூடையில் இருந்து பெண்ணின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டியில் வங்கிக்கு சென்றிருந்த பெண்ணே காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொலிஸார் என அடையாளப்படுத்தி பழக்கடை வியாபாரியிடம் பணம் பறிப்பு

## ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தைச் சூழவுள்ள பழக்கடை ஒன்றின் வியாபாரியை பொலிஸ் உத்தியோகத்தர்கள் என தம்மை அடையாளப் படுத்தி மிரட்டி பணம் பறித்த இருவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி பொலிஸ் என தம்மை அடையாளப்படுத்திய இருவர் பழக்கடை வியாபாரி ஒருவரை ஏமாற்றி 7 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் அதிகமான பணத்தை கப்பமாகப் பெற்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தின் அருகில் உள்ள கடை ஒன்றின் சி.சி.ரி.வி கமராவின் பதிவைப் பெற்ற பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இருவரையும் இனங்கண்டு பழக்கடை வியாபாரிகளிடம் ஒளிப்படங்களை வழங்கி எங்கு கண்டாலும் தகவல் வழங்குமாறு அறிவுறுத்தினர்.

அதற்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் இருவரில் ஒருவர் பேருந்து நிலையத்துக்குள் வந்துள்ளார்.

உடனே அங்கிருந்தவர்கள் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவலை வழங்கியிருந்தனர்.

அவர்கள் வரும்பொழுது சந்தேக நபர் தப்பிக்க முயன்ற போது அங்கிருந்த இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். சந்தேக நபரைப் பொறுப்பேற்ற யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையில் கீரிமலை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளது. மற்றைய சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-7-33)

# பட்டப்பகலில் நகை திருட்டு ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டு மேற்கு - கண்ணகி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்து இரண்டரை பவுண் நகை திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த 4 ஆம் திகதி வீட்டின் உரிமையாளர்கள் உறவினர் வீட்டுக்கு சென்றுள்ள நிலையில் அவர்களது வீட்டில் இருந்த இரண்டரை பவுண் நகை களவாடப்பட்டது.

வீட்டில் வைத்த நகைகளை நேற்று முன்தினம் பார்த்தபோது, நகைகள் வைத்த இடத்தில் இல்லாத நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸார் சி.சி.ரி.வி காட்சிகளை அடிப்படையாக வைத்து சந்தேகத்தின் பேரில் ஒருவரை நேற்று கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்டவர் மூளாய் வேரம் பகுதியைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் இணைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட இன்னொரு நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-33-104)

# உரிமை கோரப்படாத பட்சத்தில் அரசுடைமையாக்கப்படும்



(கரணவாய்)

கரவெட்டி பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பிடிக்கப்பட்ட மண்ணிற பசுமாடு ஒன்றை எவரும் உரிமை கோரப்படாத பட்சத்தில் அதனை அரசுடைமையாக்கப்படும் என பருத்தித்துறை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு கரவெட்டிப் பகுதியில் இரவு வேளை இனந்தெரியாத நபர்களால் பசுமாடு ஒன்று கடத்திச் செல்லப்பட்டது.

குறித்த சமயம் அப்பகுதியால் வந்த நெல்லியடி பொலிஸாரை கண்டதும் கடத்தல்காரர்கள் மாட்டை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பசுமாட்டை பொலிஸார் மீட்டு பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவுக்கமைய மல்லாவி அனிஞ்சிக் குளம் அரச கால்நடை இனவிருத்தி பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் குறித்த பசுமாட்டை எவரும் உரிமை கோரப்படாதபட்சத்தில் அதனை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4-7-60)




# மக்கள் விழிப்புணர்வுடன் சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் இது

## மருத்துவர் டயாழினி

(சாவகச்சேரி)

பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் சிந்தித்துச் செயற்பட்டு தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய காலமிது என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் திருமதி.டயாழினி மகேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று முதலாவது கொவிட் மரணம் பதிவாகியுள்ளது. அத்துடன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்த ஒன்பது பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பேணி தொற்றுக்கு இடமளிக்காது பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். பொதுமக்கள் இவ்வளவு அனர்த்தம் நேர்ந்தும் இன்ன மும் விழிப்படையவில்லை. இதன் விளைவுகள் மிக மோசமானதாக அமையலாம் என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-30)

# நாக சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான நாக சதுர்த்தி விரதம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-7)

# இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் வாராந்தம் நடத்தப்படும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 5 நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 72929 251102 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-7-8-[illegible])

# நூதனமான முறையில் சுழிபுரத்தில் கொள்ளை

(அராலி)

பழைய பொருட்கள் வாங்குவது போல் பாசாங்கு செய்து வந்த இருவர் வீட்டிலிருந்த கைப்பையை திருடிக்கொண்டு தப்பியோடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவமானது வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மத்தி பகுதியில் நேற்று இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

இரண்டு நபர்கள் சுழிபுரம் மத்தியில் உள்ள வீடு ஒன்றிற்கு சென்று பழைய பொருட்கள் ஏதாவது இருக்கிறதா? என விசாரித்துள்ளனர்.

ஒருவர் இவ்வாறு வீட்டு உரிமையாளரிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோது மற்றைய நபர் வீட்டினுள் சென்று அங்கிருந்த கைப்பையை தூக்கிக் கொண்டு தப்பியோட அவரைத் தொடர்ந்து மற்றையவரும் தப்பித்துச் சென்றுள்ளார்.

குறித்த கைப்பையில் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

# ஒரே கொள்ளையர்கள் இரு இடத்தில் கைவரிசை

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வழிப்பறிக் கொள்ளையர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் இரு வேறு இடங்களில் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் நெல்லியடி மாலுசந்தி பகுதியில் பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டது.

மேலும் இமையாணன் எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவரின் தாலிக்கொடியும் வழிப்பறி கொள்ளையர்களால் அறுக்கப்பட்டது.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-7-69)

# விபத்து; ஒருவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தங்கேணி சந்திக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப் ரக வாகனம் ஒன்றும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு கால் முறிந்த நிலையில் அவர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்கள் அராஜகம்

# சுமார் 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் ஒரு நாளில் அழிப்பு

### பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**எமது மக்களின் சொத்துகளை அழிக்கும் இந்திய றோலர்களை விரட்ட முடியாவிட்டால் இந்தக் கடற்படை எம் மண்ணில் இருந்து வெளியேறட்டும். எமது கடலை நாமே பாதுகாப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் பாராளு மன்றில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கடற்பரப்பில் கடந்த சில காலமாக இந்திய மீனவர்கள் பாரிய றோலர் படகுகளில் இல ங்கை கடற் பரப்புக்குள் நுழை ந்து மீன்பிடித்து வருகிறார்கள்.

இந்த றோலர்கள் எமது மீனவர்களின் மீன்பிடி வலை களை வெட்டியும் உபகரணங் களை, உடைமைகளையும் அழித்து வருகின்றார்கள்.

குறிப்பாக மன்னார் முதல் யாழ்ப்பாணம் ஊடாக முல்லைத் தீவு வரையான தமிழ் மீன வர்கள் இதனால் பெரும் பாதிப் புக்கு உள்ளாகி உள்ளனர்.

தும்பளை கிழக்கில் இருந்து கொட்டடி வரைக்குமான பகுதி களில் ஒரே நாளில் இந்திய றோலர்களால் ஏறத்தாழ 15 மில்லியன் ரூபாய் பெறுமதி யான மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அழிவுகள் ஓரிரு நாட் கள் அல்ல, ஒவ்வொரு நாளும் எமது கடற்பரப்பில் நடந்து கொண் டிருக்கிறது. அப்படியாயின் வட க்கு-கிழக்கில் என்ன நடந்து



கொண்டிருக்கிறது. வடக்கு-கிழ க்கு கரையோரம் முழுவதும் கடலை பாதுகாப்பது எனும் பெயரில் எமது மக்களின் நிலங் களை அபகரித்து பாரிய கடற் படை முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன.

எமது மக்களின் வளத்தை யும் உடைமைகளையும் அழிக் கும் வெளிநாட்டு ஊடுருவல் களைத் தடுக்க முடியாவிட்டால், கடற்படை உண்மையில் என்ன செய்து கொண்டிருக்கிறது?

தமிழ் மீனவர்களின் வலை களும் மீன்பிடி உபகரணங் களும் அழிக்கப்படுவதை வேண்டுமென்றே இந்த அரசு அனுமதிக்கிறதா? இது ஒரு மிக மோசமான ஒரு செயற்பாடு. அது மட்டுமல்ல, கடல் அட்டை பண்ணைகள் பாரிய அளவில் வடக்கு பிரதேசத்தில் அமைக் கப்பட்டு வருகின்றன.

பாரிய அளவில் அவற்றை அமைப்பதற்கான அனுமதி யையும் வழங்கி வருகிறார்கள். இதன்மூலம் அந்தப் பிரதேசத் தின் கடற்படுக்கை மீன்பிடி, முழுமையாக அழிக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கிறது. அதன் மூலம் எதிர்கால மீன்பிடித் தொழில் மிகக்கடுமையாக பாதி ப்புகளை எதிர்கொள்ள நேரிடும்.

எமது கடற்பரப்புக்குள் ஊடு ருவி, எமது மக்களின் சொத் துக்களை அழிக்கும் இந்திய றோலர்களிடமிருந்து பாதுகாப்பு கொடுக்க முடியாவிடின், இந்த கடற்படை எமது மண்ணில் இருந்து வெளியேறட்டும். எமது கடலை பாதுகாப்பதை எமது மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித் தார். (நி-5)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 36 ½ செவ் 2 சூரி 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: ஜேர்மனி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அனுப்பக் கூடியவராக இருத்தல் நல்லது<br>தொ.இ: B/2746 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ். சூரி 11 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: அரச தாதியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/6583 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 35 ¾ செவ் 5 சூரி 3 இல்<br>தகைமை/தொழில்: A/Lகடை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு<br>தொ.இ: B/2750 | பிறப்பு : 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 8 சூரி 5 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: HND பட்டதாரி எதிர்பார்ப்பு: பொறியியலாளர், விரிவுரையாளர்<br>தொ.இ:G/6591 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 15 செவ். சூரி 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: கமம்<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்<br>தொ.இ: B/2754 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 10 சூரி 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: அரச வைத்திய அதிகாரி<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்<br>தொ.இ:G/6599 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28 செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA, MA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் தீவகம், வடமராட்சி வேண்டாம்<br>தொ.இ: B/2767 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 5 சூரி 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ஆயுர்வேத மருத்துவ மாணவி<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்து ஆனவர்<br>தொ.இ:G/6600 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் ...
சேவைக் கட்டணமாக ரூபா 500...


## 90% மானோரின் மாதிரிகளில் டெல்டா திரிபு கண்டறிவு

(கொழும்பு)

கொழும்பு டெல்டா கொவிட் திரிபு அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகை யில் பரவி வருவதாக ஸ்ரீஜய வர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறு வனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் டெல்டா கொவிட் திரிபு எந்தளவு வேகத்தில் பரவி வரு கிறது என்பது தொடர்பாக அவர் டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஜூலை மாதத்தில் டெல்டா பரவல் தொடர்பான புள்ளி விபரத்தைக் காட்டும் வரைபை இணைத்துள்ள அவர், ஜூலை முதல் வாரத்தில் கொழும்பில் அடையாளம் காணப்பட்ட கொவிட் நோயாளர்களில் 75 சதவீதத் துக்கும் அதிகமானோரின் மாதிரி களில் அல்பா திரிபு கண்டறியப் பட்டிருந்ததுடன், 19.3 சதவீதமா னோரிடையே டெல்டா திரிபு கண் டறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எனினும் ஜூலை 31 ஆம் திக தியாகும்போது இந்த நிலைமை மாற்றமடைந்து, கொழும்பில் கொவிட் தொற்று உறுதியான 90 சதவீதத்துக்கு அதிகமானோரின் மாதிரிகளில் டெல்டா திரிபு கண்ட றியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயமானது மிகுந்த அவதானம் செலுத்த வேண்டிய தொரு பாரதூரமான நிலை மையாகும் என்றும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார். (நி-5)

## பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் திலிப் வெத ஆரச்சிக் கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவ ட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸகுட்டி ஆராச்சிக் கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-5)


### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1989 விசாகம் கி.பா. 4 3/4 அரச வங்கியில் தொழில் செய்யும் காரைநகர் மணகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு :-077 153 2719

(7548)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் போராட்டங்களிற்கு பூரண ஆதரவு வழங்குவோம்

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை

**(நெளுக்குளம்)**


**தற்போது இடம்பெறுகின்ற சம்பள முரண்பாடுகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆசிரியர் சங்கங்களி னால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலை யில் அவர்களின் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவு உண்டு என சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்தார்.**

நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவ் அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

நாட்டில் உள்ள அனைத்து துறைகளையும் சார்ந்த அத்தனை அதிகாரிகளையும் அறிஞர்களை யும் உருவாக்கியவர்கள் இவ் ஆசிரியர்களே. எனவே அவர்க ளின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை அனைவருக் கும் உள்ளது. ஆதரவு நல்க வேண்டியது எமது ஒவ்வொரு வர்களின் கடமையுமாகும்.

மேலும் இன்று ஆசிரியர்கள் தமக்காக மட்டுமல்ல அனைத்து துறைசார்ந்தவர்களுக்குமாகவே போராடிக்கொண்டிருக்கின்றனர் என்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் களின் போராட்டம் என்ன கார ணங்களுக்காக முன்னெடுக்கப்ப டுகிறதோ அந்த இலக்கினை அவர்கள் அடைய வேண்டும். அதுவரை அவர்களிற்கு ஆதரவு வழங்க வேண்டிய தேவை அனை வருக்கும் உண்டு. எனவே அவர் கள் போராட்டம் வெற்றி பெறும் வரை எமது ஆதரவுகள் தொடர் வதோடு எம் குரல் அவர்களு க்காக சேர்ந்து ஒலிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (7-4-299)

# பிரமந்தனாறு பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு



(கண்டாவளை)

தருமபுர பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பிரமந்தனாறு மயில் வாகனம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 200 துப்பாக்கி ரவைகள் மற்றும் இரு பத்தைந்து மூட்டைகளில் கட் டப்பட்ட பாவித்த ரவை வெற் றுக்கூடுகளும் தருமபுரம் பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் தொடர்புடைய சந் தேகநபர்கள் 5 பேர் கைது செய் யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (7-4-316)



வன்னிக்கோப் - அவுஸ்திரேலியா நிறுவனத்தினால் துணுக் காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 3 மாணவர்களுக்கு smart phone வழங்கி வைக்கும் நிகழ்வு துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது. (படம் :- தவசீலன்)

# காட்டு யானைகளால் அச்சத்துடன் வாழும் சின்னத்தம்பனை மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சின்னத்தம் பனை கிராமத்தில் காட்டு யானை களின் தொல்லை அதிகரித்துள் ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு சின்னத்தம்பனை கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்த யானைகள் வாழைகள், தென்னம்பிள்ளைகள், மரவ ள்ளி, பலாமரம் போன்ற பயன் தரும் மரங்களை சேதப்படுத்தி யுள்ளன.

இந்நிலையில் கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வரு வதால் தாம் தமது சொந்தக் கிரா மத்தில் இருந்து வேறு இடங் களுக்கு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை உரு வாகி வருவதாக கவலை தெரி வித்த மக்கள் தாம் நிரந்தரமாக விவசாயம் செய்து வாழ்வதற்கு யானைகளுக்கான மின்சார வேலியை அமைத்துத் தரு மாறும் அதிகாரிகளுக்கு கோரி க்கை விடுத்தனர். (7-4-299)

# நகர அபிவிருத்தி திட்டத்தில் கிளிநொச்சி, பூநகரியும் இணைப்பு

(அக்கராயன்)

இலங்கையில் தெரிவு செய் யப்பட்ட 100 நகரங்களை அபி விருத்தி செய்து அழகுபடுத்தும் திட்டத்தில் கிளிநொச்சியும் பூநகரியும் இணைக்கப்பட்டுள் ளன. கிளிநொச்சி நகரில் டிப்போ சந்தியும், பூநகரியில் வாடியடி சந்தியும் அபிவிருத்தி செய்யப் பட்டு அழகுபடுத்தப்பட நகர அபி விருத்தி அதிகார சபையினரால் திட்டமிடப்பட்டுள்ளது. இலங் கையின் இரண்டாம் நிலை யிலுள்ள தெரிவு செய்யப்பட்ட நகரங்களை அபிவிருத்தி செய்து, அழகாக்குவது இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கா கும். (7-4-350)

# மணல் அகழ்வோரினால் யானை வேலிகள் சேதம்

## கிராம மக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன் குளம் கிராமத்தில் அமைக்கப் பட்டுள்ள யானை வேலிகளை மணல் அகழ்வில் ஈடுபடுவோர் சேதப்படுத்தி வருவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படு கின்றது.


மணல் அகழ்வில் ஈடுபடும் போது யானை வேலிகளை சேதப்படுத்துவதனால் யானை கள் கிராமங்களுக்குள் நுழை வதாகவும் ஏற்கனவே யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதும் இரண்டிற்கு மேற்பட்ட இடங் களில் பாதைகள் காணப்பட்ட தாகவும் தற்போது மணல் அகழ் விற்கு உழவு இயந்திரங்களில் செல்பவர்கள் யானை வேலி யினைக் கண்டபடி சேதப்படுத்து வதாகவும் மக்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

மேலும் இதனைக் கட்டுப்ப டுத்துவதற்கு வனவளத் திணை க்களம், கனியவளத் திணைக் களம் மற்றும் ஐயன்கன்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யானை வேலிகள் கூடுதலாக சேதப் படுத்தப்படுமானால் யானை வேலியின் பயன்கள் கிராம மக்களுக்கு கிடைக்கப் போவ தில்லை எனவும் யானை வேலியினை சேதப்படுத்தி மணல் அகழ்வில் ஈடுபடுபவர் களின் அனுமதிகளை எதிர் காலத்தில் நிறுத்த வேண்டும் எனவும் ஐயன்கன்குள மக்கள் தெரிவிக்கின்றனர். (7-4-350)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட விவ சாயக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலா ளர் திருமதி.ரூபவதி கேதீஸ் வரன் தலைமையில் நடைபெற் றது. இக்கூட்டத்தில் இரணை மடு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் சிறுபோக நீர்ப்பாசனத்திற்காக வட்டக்கச்சி, மகிழங்காடு, மருத நகர் ஆகிய இடங்கள் உள்வாங் கப்படுவதாகவும் ஏனைய இடங் களை எதிர்வரும் காலங்களில் பரிசீலிப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. மேலும் முரசுமோட் டைக் கமக்காரர் அமைப்பில் 4000 ஏக்கர் வரையான வயல் நிலங்கள் உள்ளதால் இவ் அமைப்பை மூன்றிற்கு குறை யாத அமைப்பாக பிரித்தல், 5 ஏக்கர் வரையான நெல் செய்கை யாளர்களிற்கு 25,000 ரூபாய் உரமானியம் வழங்க நடவ டிக்கை மேற்கொள்ளல், கால், அரை ஏக்கர்களிற்கு தூவல் நீர்ப்பாசன பொறிகளிற்கான மானிய உதவிகள், வாழைச் செய்கைக்கான மானிய உதவித் திட்டங்கள் வழங்கல் உள்ளிட்ட பல விடயங்கள் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன. (7-4-350)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

07.08.2021
ஆடி 21, சனிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.31 மணிவரை
புநர்பூசம் முற்பகல் 9.16 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சந்திராஷ்டமம்: பூராடம்
போதாயன அமாவாசை

வளவன்

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**ரிஷபம்**: நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொது வாழ்வில் அந்தஸ்து கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு மகத்துவம் தரும்.

**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர் கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கடகம்**: எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக அமையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**: தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றமுண்டு, உறவினர்கள் நலன்கருதிய செலவுகள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி**: செல்வ நிலை உயரும் நாள், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்**: எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**தனுசு**: குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்**: நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்**: உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம் பிக்கையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்**: தொலை பேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

உன்னை எரித்தாலும் அகில்போல் மணம் பரப்பு

## விளாவோடை

# மனித எச்சங்கள் தொடர்பான அகழ்வுப் பணிகள் முன்னெடுப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த பகுதியை சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தடையவியல் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளரினால் எச்சங்கள் அவதானிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அப்பகுதியில் பாதுகாப்பு அணைக்கட்டு காணப்படும் நிலையில் அந்த அணைக கட்டை அகற்றிய போதே குறித்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்டது.

அதன் அடிப்படையில் மேலும் எச்சங்கள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், அகழ்வு பணிகளை முன்னெடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதி மன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக்காலை நீதவான் முன்னிலையில் ஆரம்ப மான குறித்த் பணி சட்ட வைத்திய அதிகாரி வைத் தியர் டனுசன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டதுடன், அடையாளம் காணப் பட்ட எச்சங் கள் பொதியிடப்பட்டது. இதன் பணிகள் இன்றும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (7-4-100)

# மன்னாரில் 2 வது கட்டமாக பைஸர் தடுப்பூசி



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது கட்டமாக நேற்றுக் காலை தொடக்கம் "பைஸர்" கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக் கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கடந்த மாதம் "பைஸர்" கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டது.


இந்த நிலையில் விடுபட்டவர்களுக்கு குறித்த தடுப்பூசி செலுத்தும் பணி யின் 2 ஆவது கட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக் கப்பட்டது. (7-4-285)

# வவுனியாவிலும் டெல்டா தொற்று

(வவுனியா)

வவுனியாவிலும் டெல்ரா வைரஸ் தொற்றுடன் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் டெல்ரா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவிலும் டெல்ரா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். (7-4-250)



இலங்கை பொலிஸ் சேவைக்கு (உப பொலிஸ் பரிசோதகர்) ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

(படம்: சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# கொரோனாவில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க சிறப்பு பணிக்குழுக்கள்

## தமிழக அரசின் புதிய நடவடிக்கை

(சென்னை)


**கொரோனாவில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க சிறப்பு பணிக் குழுக்களை அமைக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.**

சுகாதாரத்துறை செயலாளர் இராதாகிருஷ்ணன் தலைமையில் 13 பேர் கொண்ட பணிக்குழுவினை அமைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள், பாதிக்கப்படும் குழந்தைகளுக்கான சிகிச்சை முறைகள் குறித்த ஆலோசனைகளை இந்தக்குழு வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை குழந்தைகளைத் தாக்கும் அபாயம் உள்ளதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், தமிழக அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

## உலக சுகாதார அமைப்பின் கோரிக்கையை நிராகரிக்கும் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி




(ஜெனிவா)

தடுப்பூசி வழங்கலில் நிலவும் ஏற்றத்தாழ்வை சீராக்கும் வகையில், டெல்டா வைரஸுக்கு எதிராக மூன்றாவது டோஸ் வழங்குவதை நிறுத்துங்கள் என உலக சுகாதார நிறுவனம் முன்வைத்திருந்த கோரிக்கையை பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன.

மாறுபாடு அடைந்துள்ள டெல்டா, டெல்டா பிளஸ் வைரஸ்களாக ஜேர்மனி, பிரான்ஸ் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மூன்றாவது டோஸ் செலுத்த தயாராகி வருகின்ற நிலையில், உலக சுகாதார நிறுவனத் தலைவர் டெட்ரோரஸ் அதானம் கேப்ரியேஸஸ் இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன. செப்டெம்பர் மாதம் முதல் முதியவர்கள் மற்றும் எளிதில் உடல்நிலை பாதிக்கக்கூடிய நபர்களுக்கு தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்த திட்டமிட்டுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் முதல் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத நோயாளிகள், முதியவர்கள் மற்றும் முதியோர் இல்லத்தில் வசிப்பவர்களுக்கு பூஸ்டர் டோஸ்களை செலுத்த ஜேர்மனி அரசாங்கம் விரும்புவதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை கூறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

## இந்தியர்களுக்கான பயணத்தடையை தளர்த்தியது பிரித்தானியா



(லண்டன்)

இந்தியாவில் இருந்து வருபவர்கள் மீதான பயணத் தடையை பிரித்தானியா அரசு தளர்த்தியுள்ளது. இதன்படி இந்தியா சிவப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

இந்த நடைமுறை நாளை முதல் நடைமுறைக்கு வருகிறது. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து பிரித்தானியாவிற்கு செல்பவர்கள் அங்கு 10 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டியதில்லை எனவும் அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அதேநேரம் மூன்று நாட்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனை அறிக்கையை வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8-7)

### உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :- 4 289 460**

**தொற்று :- 202 108 061**

**(நேற்றைய மாலை நிலைவரம்)**

## கொரோனா பாதிப்புக்கு பிறகும் உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படும்

(ஜெனிவா)

கொரோனாப் பாதிப்புக்கு பிறகு ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகள் கவலையளிக்கும் விதமாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் மரியா வான் கெர்கோவ் கூறுகையில், "உலகம் முழுவதும் 20 கோடிக்கும் அதிகமானோர் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர். தற்போது தொற்றில் இருந்து மீண்ட பிறகு எழும் உடல் நலப்பிரச்சினைகளால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பது குறித்த விபரங்கள் எங்களிடம் இல்லை.




ஆனால் தொற்றிலிருந்து மீண்ட பிறகு எழும் உடல்நலப் பிரச்சினைகள் கவலை அளிக்கும் விதமாக உள்ளது. நீண்ட நாள் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொற்றிலிருந்து மீண்ட பிறகு உடல் நலப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இதனால் அவர்கள் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவு நாட்கள் வரை இப்பிரச்சினைகள் நீளும் என எங்களுக்குத் தெரியாது. இது குறித்து மேலும் புரிந்து கொள்ள ஆர்ாய்ச்சிகளை தீவிரப்படுத்தி உள்ளோம்" என அவர் தெரிவித்து உள்ளார். (8-7)

## லெபனான்
## வான்வ



(ஜெருசலேம்)

லெபனான் மீது இஸ்ரேல் வான் வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

லெபனானில் இருந்து இஸ்ரேல் எல்லைக்குள் முன்னதாக தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய விமானப் படை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ள

ள்

...கப்பட்டுள் ...தாற்றின் ...குழந்தை ...அபாயம் ...நிபுணர் ...த்திருந்த ...க அரசு ...கைகளை ...ப்பிடத்தக் (8-7)

...டயை

...ளை முதல் ... இதனைத் ...ல் இருந்து ...சல்பவர்கள் ...ட்டாய தனி ...வேண்டிய ...நாட்டு அரசு ...நாட்களுக்கு ...கொரோனா ...யை வைத் ...வும் அறிவு (8-7)

# டெல்டா வகை கொரோனா இதுவரை 135 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

**இந்தியாவில் முதல் முறையாகக் கண்டறியப்பட்ட, மிகவும் வேகமாகப் பரவும் தன்மை கொண்ட டெல்டா வகைக் கொரோனா 135 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

World Health Organization

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த திங்கட்கிழமை நிலவரப்படி, ஆல்ஃபா வகை கொரோனா உலகின் 132 நாடுகளிலும் பீட்டா வகை கொரோனா 81 நாடுகளிலும் மிகவும் வேகமாகப் பரவும் தன்மை கொண்ட டெல்டா வகை கொரோனா இதுவரை 135 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் புதிதாக கொரோனா கண்டறியப்படுவோரின் எண்ணிக்கை ஒரு மாதத்துக்கும் மேலாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஜூலை 26 முதல் முதலாம் திகதி வரை மட்டும் 40 இலட்சம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மத்தியதரை, மேற்கு பசுபிக் பிராந்திய நாடுகளில் தினசரி கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதால் சர்வதேச அளவில் அந்த எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் புதிய கொரோனாத் தொற்று 9 சதவீதம் அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-7)

## வடக்கு அயர்லாந்தில் சிறுவர்களுக்கு தடுப்பூசி

(டப்ளின்)

வடக்கு அயர்லாந்தில் 16 மற்றும் 17 வயதுடைய சிறுவர்களுக்கு நேற்றைய தினம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான முதல் தடுப்பூசி வழங்கப்பட்டது.

இந்த வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு எந்தவிதமான உடல்நலக் குறைபாடுகளும் இல்லாமல் தடுப்பூசிகளை வழங்கும் பிரித்தானியாவின் முதல் நாடு இதுவாகும்.

தடுப்பூசி மற்றும் நோய்த் தடுப்புக்கான கூட்டு குழு (ஜேசிவிஐ) பரிந்துரையைப் பின்பற்றி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

16 மற்றும் 17 வயதுடையவர்கள் வடக்கு அயர்லாந்தில் சுமார் 45 ஆயிரம்பேர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

## இங்கிலாந்தில் ஐந்தில் ஒரு இளைஞருக்கு கொவிட் தொற்று




(லண்டன்)

இங்கிலாந்தில் கொவிட்-19 தொற்றுடன் மருத்துவமனையில் உள்ளவர்களில் ஐந்தில் ஒருவர், 18 முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள் என இங்கிலாந்தின் தேசிய சுகாதார சேவையின் புதிய தலைமை நிர்வாகி அமண்டா பிரிட்சார்ட் தெரிவித்துள்ளார்.

சுமார் 1,000 இளைஞர்கள் தற்போது மருத்துவமனையில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

தடுப்பூசி போட மக்கள் முன்வந்தது மிகவும் முக்கியமானது எனவும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர்களின் அளவு கடந்த குளிர்காலத்தின் அளவை விட நான்கு மடங்கு அதிகம் எனவும் அவர் கூறினார்.

குளிர்கால எழுச்சியின் போது மருத்துவமனையில் இருந்தவர்களில் சுமார் 5.5 சதவீதம் பேர் இளைஞர்கள் ஆவர். (8-7)

# ...னான் மீது இஸ்ரேல் ...வழித் தாக்குதல்



...ான் ...து. ...ரேல் ...க்க் ...லிய

அதற்கு பதிலளிக்கும் வகையில் ஏவுகணைகள் ஏவப்பட்ட தளங்களை இலக்கு வைத்து பதில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அந்த நாட்டு ஊடகமொன்றுக்கு கருத்துரைத்த இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர், ஒரு தகவலை அனுப்பும் நோக்கில் பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதனை விடவும் மேலும் பதில் தாக்குதல்கள் நடத்த முடியும் எனவும் எச்சரித்தார். லெபனானில் உள்ள பாலஸ்தீன குழுக்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டிலிருந்து லெபனான் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை இதுவே முதற் தடவை என இஸ்ரேல் அறிவித்துள்ளது. (8-7)

## கொவிட் தடுப்பூசிகளை பயன்படுத்தாத நாடுகள் தொடர்பில் ஐ.நா. அவதானம்

(ஜெனிவா)

கொவிட் தடுப்பூசிகளைப் பெற்று அவற்றை பயன்படுத்தாத நாடுகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அவதானம் செலுத்தியுள்ளது.

நிர்வாகக் காரணங்கள், கவனக் குறைவு மற்றும் தடுப்பூசி பெற்றுக் கொள்வதை நிராகரித்தல் போன்ற காரணங்களுக்காக சில நாடுகள் தடுப்பூசிகளைப் பயன்படுத்தாமல் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டெபன் டுபாரிக் தெரிவித்தார்.

கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் 138 நாடுகளுக்கு 186.2 மில்லியன் கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு இந்த வருட இறுதிக்குள் 2 மில்லியன் தடுப்பூசிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (8-7)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் 200 உடல்களை எரிக்கக்கூடிய சுடுகாட்டை உருவாக்கும் நேரம் வந்து விட்டது

## ரஜரட்ட பல்கலைக்கழகம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை காரணமாக மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என பேராசிரியர் சுனேத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.**

நாளாந்தம் 150 முதல் 200 உடல்களை எரிக்கக்கூடிய ஒரு சுடுகாட்டை உருவாக்க வேண்டிய நேரம் ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்டா மாறுபாட்டிற்கு சவால் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது டுவிட்டரில் பதிவொன்றை பதிவிட்டு பேராசிரியர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். பேராசிரியர் சுனேத் ரஜரட்ட பல்கலைக்கழத்தின் சமூக நோய்கள் பிரிவு பேராசிரியராக செயற்பட்டு வருகின்றார்.

அவர் ஒரு தொற்று நோயியல் நிபுணர் மற்றும் ஆராய்ச்சி விஞ்ஞானி என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தடுப்பூசி அட்டைகள் போலியாயின் கம்பி எண்ணுவீர்கள்

## மருத்துவர் சுகுணன்



(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசியை போட்டுக்கொள்ளாத சிலர் தடுப்பூசி அட்டைகளை களவாடி அதை வெறுமனே போலியாக நிரப்பி வைத்துக் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெறுமனே போலியாக நிரப்பிய அட்டைகளை வைத்துக் கொண்டிருந்தால் அது சட்டப்படி நீங்கள் அரசாங்கத்தை ஏமாற்றுகிறீர்கள் என்ற அடிப்படையில், தங்களின் உத்தியோகத்தை இழந்து, சலுகைகளை இழந்து சிறைக்குள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

போலிகளை நம்பி உங்களை நீங்கள் இழந்து விடாதீர்கள். கொவிட்-19 இற்கான தடுப்பூசி வழ்ங்கலின் போது தகவல்கள் அனைத்தும் கணனியில் அதற்குரிய Tracker எனப்படும் மென்பொருளின் மூலம் பதியப்பட்டு வருகின்றது.

அதில் தடுப்பூசி ஏற்றியவர்களின் சகல விடயங்களும் உள்ளன. எதிர்காலத்தில் அலுவலக ரீதியாக, அல்லது சட்ட ரீதியாக அல்லது வெளிநாட்டிற்கு செல்லும் போது பாவிக்க வேண்டிய அத்தாட்சி ரீதியாக கணனியில் பதியப்பட்ட மென்பொருளின் மூலம் கிடைக்கின்ற சான்றிதழ் மிக அவசியமாகத் தேவைப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2374

**துஷா**

தொடர்ந்து விடாமல் மூன்று மாதங்கள் கிரீன் டீ அருந்தியதில் 3 kg குறைந்து விட்டது.




நான் டீத் தூளை சொன்னேன்.

**சுஜி**





**மஞ்சு**

நமக்கு பிடித்த மாதிரி ஒரு நாள் life மாறும்



life எங்கம்மா மாறுது
பிரச்சினை தான் புதுசு புதுசா மாறுது

**சாமினி**




**நிலா**

வாழ நினைத்தால் வாழலாம்... வழியா இல்லை பூமியில்...



அந்த வழியைத்தான் பல வருசமா தேடிக் கொண்டு இருக்கேன்... எத்தனை கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கோ? இல்ல எவனாவது அடைச்சிட்டானோ என்று

**சர்மிளா**

ஜென் தத்துவம் என்ன சொல்லுதெண்டா...



30 நிமிசத்துக்கு மேல ஒரு பொண்ணு Mobile பேசிக்கொண்டு இருந்தால் அது கண்டிப்பாக Incomming call என்றுதான் அர்த்தம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் பாதுகாப்பை கிராமங்களில் இருந்து பலப்படுத்த வேண்டும் - ஜனாதிபதி

**(கொழும்பு)**

**சிறுவர்களின் பாதுகாப்பை கிராமிய மட்டத்திலிருந்து பலப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களை பணிக்கமர்த்துவது தொடர்பில் வெளிவந்திருக்கும் தகவல்களுக்கு ஏற்ப, அவர்களில் அதிக சதவீதமானவர்கள் பெருந்தோட்டப் பகுதி சிறுவர்கள் என்றும் இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்குத் தேவையான அதிகாரம், கிராம அதிகாரி மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களின் விபரங்கள் கிராம அதிகாரிகளிடம் உள்ளன.

வீடொன்றில் சிறுவர் ஒருவர் இல்லாமல் போவது பற்றி கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அது குறித்து உடனடியாகச் செயற்பட்டு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கு "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதனை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தனியான இராஜாங்க அமைச்சு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைக் கல்விகள், அனைத்துப் சிறுவர்களுக்கும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பாதிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அனைத்துச் சமயங்களைச் சேர்ந்த சிறுவர்களையும் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதன் மூலம் கிடைக்கும் ஆன்மிகப் பண்புகளின் ஊடாக சிறுவர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பினை பலப்படுத்த முடியும்.

போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கப்பட்டுள்ள சிறுவர்களை அவற்றிலிருந்து மீட்க வேண்டுமென்பதுடன், அவர்கள் அதற்காகத் தூண்டப்படக் கூடிய காரணிகளைக் கண்டறிந்து, உரிய தீர்வுகளை வழங்க வேண்டியது அவசியமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார். (நி-5)

# இலங்கைக்கான தடுப்பூசிகள் திட்டமிட்டபடி வந்தடையும்

## சீனா உறுதி

(கொழும்பு)

சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் காரணமாக சினோபார்ம் தடுப்பூசியின் உள்நாட்டு தேவை அதிகரித்துள்ள போதிலும் முன்னதாக திட்டமிட்டபடி சீனா இலங்கைக்கான மேலும் நான்கு மில்லியன் தடுப்பூசிகளை இவ்வாரம் வழங்கும் என்று உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளில் 72 சதவீதமானவை சினோபார்ம் தடுப்பூசிகளாகும்.

கடந்த மார்ச் 31 ஆம் திகதியன்று 6 இலட்சம் தடுப்பூசிகள், மே மாதம் 26 ஆம் திகதியன்று 5 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றிருந்த நிலையில், கடந்த மாத இறுதிப் பகுதியில் வழங்கப்பட்ட 16 இலட்சம் தடுப்பூசிகளுடன் மொத்தமாக 27 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை சீனா அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாடு

## 10 இலட்சம் கொள்கலன்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாடையடுத்து, 10 இலட்சம் எரிவாயு கொள்கலன்களை இறக்குமதி செய்வதற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் தமது உற்பத்தியை பகிரும் செயற்பாட்டை நிறுத்தியுள்ள நிலையில், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு தேவையான எரிவாயுவை தட்டுப்பாடு இன்றி பகிர்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் எரிவாயுத் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் மாற்று வழிகள் இன்றி நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறை காரணமாக லாஃப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## நாடக மேடை

இந்த உலகமே ஒரு நாடக மேடை. அதிலே நாங்கள் எல்லோரும் நடிகர்கள்! இது ஞானிகள் சொல்கிறது. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இந்த உலகத்திற்குள்ளே எத்தனையோ நாடக மேடைகள், எத்தனையோ நடிகர்கள், எத்தனையோ நாடகங்கள் இதெல்லாம் எப்படி ஆரம்பமாகியது? அது தான் இன்றைக்குத் தகவல்.

ஆதிமனிதன் பேச ஆரம்பிப்பதற்கு முன்னர் சைகையால் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருந்தான்? இதனாலே அப்போது நடிப்பு ஆரம்பமாகிவிட்டது. முதலிலே ஒரு வேட்டையைத்தான் அவன் நடித்துக் காட்டியிருப்பான். இவன் எப்படிப் போனான், எதிரிலே மிருகம் எப்படி வந்தது, அதனுடன் எப்படி சண்டை போட்டான், எப்படி அடித்துக் கொண்டு வந்தான்.

இதை அப்படியே மற்றவர்களுக்கு நடித்துக் காட்டித் தானே புரிய வைத்திருக்க வேண்டும். இந்தக் காலத்திலேயெல்லாம் நாடகங்களிலே நடிக்கிறவர்களை நடிகர்கள் என்கிறோம். ஒரு காலத்திலே இவர்களுக்கு என்ன பெயர் தெரியுமா? "திஸ்பியர்கள்!" இதற்குக் காரணம் உண்டு!

இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு கிரீஸ் நாட்டிலே திஸிபியஸ் என்று ஒரு ஆள் இருந்தான். அவன் ஒரு பெரிய நாடகக் கலைஞன். அவன் சில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டான், பயிற்சி கொடுத்தான், நாடகக் குழுவை உருவாக்கினான், நடிகர்களையும் நாடகத்திற்குத் தேவையான பொருட்களையும் ஏற்றிக் கொண்டு போவதற்கு ஒரு வண்டியையும் தயார் செய்தான்.

அந்த வண்டியிலே அவன் கிரேக்க நாடு முழுவதும் சுற்றினான். ஊர் ஊராக நாடகம் போட்டான். ஒரு ஊருக்குப் போனதும் அங்கே நாடகம் நடத்த தியேட்டர் இருக்கா என்றெல்லாம் பார்க்கிறதில்லை.

ஏனென்றால் அப்போதெல்லாம் தியேட்டர் என்றால் என்னென்றே தெரியாது. நாடகம் என்றால் அதை ஒரு மூடிய கொட்டகைக்குள்ளே தான் நடத்த வேண்டும் என்று யாருக்கும் தோன்றவில்லை. இந்த வண்டி போகும். அதிலே ஒரு பகுதி அப்படியே ஒரு மேடை மாதிரி விரிந்திருக்கும். அதிலே ஏறி நின்று நாடகத்தை நடித்துக் காட்டுவார்களாம்.

மக்கள் எல்லாம் எதிரிலே தரையிலே உட்கார்ந்து அதைப் பார்ப்பார்களாம். உலகத்தின் முதல் நடமாடும் தியேட்டர் இதுதானாம். திஸிபியஸ் தான் முதன் முதலாக உலகத்திலே நாடகம் என்கிற பொழுதுபோக்கை நடத்திக் காட்டினவன் என்று சொல்கிறார்கள். அவன் சொந்தமாக நாடகம் எழுதினான், நடித்தான், நாடகத்தை இயக்கினான்.

அதனாலே தான் அவனை First Man of the Theatre என்று சொல்கிறார்கள், அவன் தான் நாடக மேடையின் முன்னோடி! கிரேக்கர் காலத்திலேயே நாடக ஆசிரியர்கள், நடிகர்கள், ரசிகர்கள் இவர்களெல்லாம் உருவாகி விட்டார்களாம். நாடகத்தின் சரித்திரத்திலே இந்த மூன்று பிரிவும் ரொம்ப முக்கியம். கிரேக்க தியேட்டர்களெல்லாம் திறந்தவெளி மேடைகள் தான்!

பெரும்பாலும் மலைச்சரிவுகள். அதிலே படிபடியாக செய்திருப்பார்கள். கீழே அரை வட்ட வடிவிலே மேடை. அதற்கு "ஆர்கெஸ்ட்ரா" என்று பெயர். பிற்காலத்திலே இதிலே உட்கார்ந்து இசைக்குழுவினர் வாசித்ததினாலே இசைகுழுவுக்கே "ஆர்கெஸ்ட்ரா" என்கிற பெயர் வந்து விட்டது.

கிரேக்க தியேட்டர்கள் ஒன்று. அதன் காலம் கி.மு. 340 அதை இன்னமும் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். எபிடாரஸ் என்கிற இடத்திலே அது இருக்கிறது. இன்னமும் அந்தத் தியேட்டரைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். சிறந்த கிரேக்க நாடகங்களெல்லாம் அங்கே நடிக்கிறார்கள். ஆரம்ப காலத்திலே கட்டணம் கிடையாது. பின்னர்தான் நுழைவுக் கட்டண முறை வந்தது.

நடிகர்கள் பளபளப்பான ஆடைகள் உடுத்தி இருப்பார்கள். குதிக்கால் உயர்ந்த காலணிகள் போட்டிருப்பார்கள். பலவித உருவங்களிலே "மாஸ்க்" என்று சொல்லப்படுகின்ற முகமூடி உண்டு. அதனாலே ஒரே நடிகர் பல வேடங்களிலே நடிக்கிறது உண்டு.

ஆரம்பதிலே பெண் நடிகர்கள் கிடையாது. எல்லாம் ஆண் நடிகர்கள் தான். ரோமானியர்கள் தான் முதல் நிரந்தர நாடக மேடையைக் கட்டினவர்கள். அதுதான் முதல் தியேட்டர். கி.மு. 1048 கால கட்டத்திலே "பாம்பி" என்கிற நகரத்திலே அதைக் கட்டியிருக்கிறார்கள். கிரேக்க ரோமனிய தியேட்டர்களின் அடிப்படையிலே இத்தாலிய வடிவமைப்பாளர்கள் குதிரை லாட வடிவிலே ஓர் ஒடிட்டோரியத்தை உருவாக்கினார்கள்.

1576 இல் லண்டனிலே பின்ஸ்பர்ரி பில்ட்ஸில் ஜேம்ஸ்பார்ப்பேக் முயற்சியாலே தான் இங்கிலாந்தின் முதல் தியேட்டர் உருவானது! உலக நாடக மேடையின் வரலாறு அதுதான். இப்போது எல்லாம் அறிவியல் வளர்ச்சி அதிகமாகி விட்டது. திரைப்படம், தொலைக்காட்சி எல்லாம் வந்து விட்டது.

ஒவ்வொரு வீடுமே ஒரு குட்டி தியேட்டர் மாதிரி ஆகிவிட்டது. தொலைக்காட்சி முன்னால் உட்கார்ந்தால் எழுந்திருக்கவே மனசு வராது.

ஒரு அம்மா ஒரு மனோதத்துவ டாக்டரைத் தேடி வந்தார்கள்.

"டாக்டர் எங்க வீட்டுக்காரர் எப்போ பார்த்தாலும் ரி.வி முன்னால் உட்கார்ந்து அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருக்கிறார். எனக்கு சந்தேகமாக இருக்கின்றது!" என்றார்.

"இது மனக்கோளாறு இல்லை. ஆர்வக்கோளாறு... அவ்வளவு தான். இதற்காகப் பயப்படாதீர்கள்" என்றார் டாக்டர்.

"அப்படி இல்லை டாக்டர் ரி.வி ஓடும் போது நாம் எல்லோரும் தான் அதை பார்க்கின்றோம்! ஆனால் அவர் ரி.வியை நிறுத்தினதுக்கு அப்புறமும் அதையே உற்றுப் பார்க்கிறார். எழும்பி வர மாட்டேன் என்கிறார். அதனாலே தான் பயப்படுகிறேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

02

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அதன் படி, இது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் கோரல் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அச்சந்தர்ப்பத்தில் அதற்கெதிரான மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் இது தொடர்பாக இருதரப்பினரதும் கருத்தறிந்த பின் திருத்தங்களுடன் அதற்கு உயர் நீதிமன்ற அனுமதி கிடைத்தது.

1987 ஜுலை 29 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி அதே ஆண்டு நவம்பர் 14 இல் இலங்கை பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது.

**இலங்கை-இந்திய ஒப்பந்தம்**

**இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டினைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய பல இன மக்கள் வாழும் பல மொழி பேசும் ஒரு நாடாக இலங்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு இன மக்களும் அக்கறையோடு பேணிப் பாதுகாக்க வேண்டிய தனித்துவமான கலாசாரத்தையும் மொழியையும் கொண்டுள்ளவர்கள் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடமென்றும் இவர்கள் எக்காலத்திலும் மற்ற இன மக்களோடு இங்கு சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டினையும் பலப்படுத்தக்கூடிய சக்திகளை வலுப்படுத்துவதையும் அதன் பல்லின, பல மொழி பல சமய மக்கள் வாழும் பன்முகத்தன்மையைப் பாதுகாத்து இங்கு எல்லாப் பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், சௌஜன்யமாகச் சீரும் சிறப்போடு அவரவர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து வாழவேண்டும் என்பதையும் கருத்திற்கொண்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 1987 ஜுலை 29 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியாலும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவாலும் கைச்சாத்திடப்பட்டது.**

**1987 ஜுலை 29 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு நவம்பர் 14 இல் இலங்கை பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைச்சட்டம் இல 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது.**

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உள்ளவை பற்றி.....**

மாகாண சபைகள் அமைக்கப்பட்டதற்கான நோக்கம் என்னவென இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் முகவுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

1.இலங்கையின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் ஒற்றை ஆட்சியையும் பா்துகாப்பதற்காகவும்,

2. இலங்கையில் பல்லின மக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் வாழும் நாடாதலாலும் பல மொழி பேசும் ஒரு நாடாக ஏற்றுக்கொள்வதாலும்,

3.பல்லின மக்கள் வாழ்வதால் அவ்வவ் இனத்திற்கு வெவ்வேறான மொழி, கலாசாரம், என்பன உண்டு என்பதை அங்கீகரிப்பதாலும்,

4. தமிழ்மொழி பேசுபவர்கள் இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒன்றாகக் கலந்து வசிப்பதுடன், வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வசிப்பதால் அவ் வடக்கு-கிழக்கு அவர்களது பூர்வீக பூமி என ஏற்றுக் கொள்வதாலும்,

5. இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒற்றையாட்சி என்பதாலும் அவற்றைப் பாதுகாக்க வேண்டியிருப்பதாலும் மாகாண சபைகள் அமைப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது.

மாகாண சபை ஏற்படுத்தல், மாகாண சபைகளை ஒன்றிணைத்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட வேண்டிய உத்தேச சர்வஜன வாக்கெடுப்பு, அரசகரும மொழிச் சட்ட அமுலாக்கங்கள் ஆகிய சம்பந்தமான பிரேரணைகளை நடைமுறைப்படுத்த இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்றும் இவ் உடன்படிக்கையில் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளது.

1987 ஒகஸ்ட் 15 இல் அவசரகாலத்தை நீக்குதல், இலங்கை இராணுவத்தையும் பாதுகாப்புப் படையினரையும் முகாம்களுக்குள் கட்டுப்படுத்தல், 2.10 ஆவது பந்தியில் குறிப்பிட்டபடி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தல், பொதுமன்னிப்பு வழங்கல் மற்றும் இலங்கைத் துறைமுகங்கள் எவ்வாறு உபயோகிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிப்பது போன்ற பிரேரணைகளை இலங்கை ஜனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 37(1) ஆவது பிரிவில் இடைக்கால ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகையில், உட்பிரிவு (அ)வில் அடுத்து அமைந்த இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் தற்காலிக இணைப்பு பற்றி ஜனாதிபதி பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் உட்பிரிவு (ஆ)வில் ஜனாதிபதி தனிநாடொன்றைத் தாபிப்பதையே தம்முடைய குறிக்கோளாகக் கொண்ட பயங்கரவாத, தீவிரவாத அல்லது வேறு குழுக்களினால் 1987 ஜுலை 29 ஆம் திகதியன்று வைத்திருக்கப்பட்டிருந்த அல்லது அவர்களின் கீழிருந்த படைக்கலங்கள், வெடிமருந்து, ஆயுதங்கள், வெடி பொருட்கள் அத்துடன் வேறு இராணுவ உபகரணங்கள் ஆகியவை இலங்கை அரசாங்கத்திடம் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டனவென்றும், அத்துடன் சொல்லப்பட்ட மாகாணங்களில் அத்தகைய குழுக்களினால் போர் நடவடிக்கைகளும் வேறு வன்செயல்களும் நிறுத்தப்பட்டு விட்டனவென்றும் அவர் தம்மைத் திருப்திப்படுத்தினால் ஒழிய (1) (அ) என்னும் உட்பிரிவில் உள்ள ஏற்பாடுகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்புடையனவாகும் என்று வெளிப்படுத்திப் பிரகடனம் ஒன்றை ஆக்குதல் ஆகாது என்று கூறப்பட்டிருக்கிறது.

உடன்படிக்கையின் 2.8 ஆம் பிரிவில் மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு முன்னர் (1987 ஒக்டோபர் 31 க்கு முன்னர்) எப்படியாவது 1987 டிசெம்பர் 31 க்கு முன்பதாக நடத்தப்பட வேண்டும் என்றும் 2.9 ஆம் பிரிவில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச்சட்டம் 1987 ஒகஸ்ட் 15 ஆம் திகதி நீக்கப்படும் என்றும், உடன்படிக்கை கைச்சாத்திட்டு 48 மணித்தியாலங்களில் (1987 ஜுலை 31 ஆம் திகதியளவில்) வன்செயல் நிறுத்தம் அமுலுக்கு வரும் என்றும் போராளிக் குழுக்கள் தற்போது (1987 ஜுலை) வைத்திருக்கும் சகல ஆயுதங்களும் ஏற்கனவே ஒழுங்கு செய்தபடி அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.

ஆனால் இலங்கை-இந்திய உடன்படிக்கையில் உள்ள மேற்கூறப்பட்ட விடயங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு சில ஆயுதங்களை மட்டுமே கையளித்திருந்தார்கள். மற்றப் போராளிக்குழுக்கள் 20 சதவீத ஆயுதங்களைக் கூட கையளிக்கவில்லை என்பதை இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல அவசரகாலச் சட்டமும் குறிப்பிட்டபடி 1987 ஒகஸ்ட் 15 ஆம் திகதி நீக்கப்படவும் இல்லை.

1987 ஒக்டோபர் 10 இல், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா ஆரம்பித்திருந்தது. புலிகளின் தளபதிகளும் போராளிகளும் கொலையுண்ட சம்பவத்தின் எதிரொலியாக வடக்கு-கிழக்கு எங்கும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. இதன் காரணமாக புலிகள் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது என்றும் அவர்களின் போராளிகளுக்கு பொது மன்னிப்பு இல்லையென்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவித்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக பந்த் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இந்திய சமாதானப் படை விடுதலைப் புலிகள் மீது தாக்குதலைத் தொடங்கியது.

**1987 ஒக்டோபர் 10 இல், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா ஆரம்பித்திருந்தது. புலிகளின் தளபதிகளும் போராளிகளும் கொலையுண்ட சம்பவத்தின் எதிரொலியாக வடக்கு-கிழக்கு எங்கும் வன்முறைச் சம்பவங்கள்தலைதூக்கின. இதன் காரணமாக புலிகள் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டனர்.**

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் கோரிக்கைக்கு நியாயமான தீர்வு வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கொரோனோ தொற்றினால் நாடு பொருளாதார சிக்க லில் இருக்கும் போது ஆசிரியர் கள் சம்பள உயர்வுக்கு போரா டுவது நியாயமற்றது என சில ருக்கு தோன்றலாம்.

ஆனால் ஆசிரியர்கள் அப் படி ஒரு நியாயமற்ற, யதார்த்த மற்ற கோரிக்கையை முன்வை த்துப் போராடவில்லை என தமிழ்த்தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக் கையில், இந்த கொவிட் பெருந் தொற்றுக்கால பொருளாதார நெருக்கடிக்குள் தமது ஊதிய உயர்வை உடனடியாக தருமாறு கூட அவர்கள் கேட்கவில்லை.

ஆசிரியர்களின் சம்பள முர ண்பாட்டினை தீர்ப்பதற்கான உத்தரவாதத்தை அரசு உடன டியாக வழங்க வேண்டும். உங்களது அரசாங்கமே 2001 ஆம் ஆண்டு நியமித்த சுபோ தினி ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்பட்ட ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்ப்பத ற்கான உத்தரவாதத்தை அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

நீங்கள் நியமித்த அந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நியாயமானவை என்பதை ஏற்று அதனை நடைமுறைப்ப டுத்துவதற்கான உத்தரவாத மொன்றையே அவர்கள் கேட்கி றார்கள். அவர்களின் கோரிக் கைக்கு அரசாங்கம் உட னடியாக செவிசாய்த்து நியாய மான முறையில் அணுக வேண் டும். அந்த உத்தரவாதத்தை உடனடியாக வழங்க வேண் டும் என கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தெரிவித்தார். (நி-5)

# தனிமைப்படுத்தல் விதி மீறல் மேலும் 123 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் தனி மைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 123 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர். இதனை பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


அதனடிப்படையில் தனி மைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இது வரையில் கைது செய்யப் பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 53 ஆயிரத்து 266 ஆக அதிகரித்துள் ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## புண்ணியத்தைச் சேர்க்கும் ஆடி அமாவாசை



அமா' என்றால் ஒரிடத்தில் பொரு ந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள். 'வாசி' என்றால் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தில் வருகிறது.

ஒரே இராசியில் சூரியனும், சந்திரனும் ஒன்று சேரும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதி பர்களாக உள்ளனர். பூமியில் உள்ள வர்களை பொருத்தமட்டில் ஒவ் வொரு அமாவாசையும் முக்கியமானது. பிதுர் கருமத்திற்கு உகந்த நாள்.

சூரிய மண்டலத்திற்கு அப் பால் தென்மண்டலத்தில் பிதுர் கள் உறையும் 'பிதுர் லோகம்' உள்ளது.

ஆடி அமாவாசையன்று கடல், ஆறு போன்ற நீர் நிலைகளில் நீராடினால் தீவினைகள் அக லும். அமாவாசையில் விரதம் இருந்து எள்ளும், தண்ணீரும் இறைத்து, பிண்டம் போடுதல் போன்றவற்றை செய்ய வேண் டும். தாய், தந்தை இறந்த திகதியை மறந்தவர்கள் ஆடி அமாவாசை யன்று திதி கொடுக் கலாம்.

நோயின்றி சுகமாக வாழவும், சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் பிதுர்க்களை திருப்தி செய்ய வேண்டும். ஆடி அமாவா சையன்று மூதாதையர் களின் படத்துக்கு மாலை போட்டு, அவர்களுக்கு பிடித்தமான உணவு வகைகளை படைத்து அவர் களை வணங்க வேண்டும்.

முதலில் காகத்திற்கு உண விட்டு பின்பு விரதம் முடிக்க, கர்ம வினை கள் நீங்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## பாவித்த பொருட்களின் இறக்குமதிக்கு தடை

(கொழும்பு)

வெளிநாடுகளில் பாவனைக்கு உட்படுத்திய பொருட் களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளானது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் இத்தீர்மானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் குறிப்பாக இலத்திரனியல் பொருட்கள், வாகனங்கள் மற்றும் ஜவுளிகள் என்பன இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொது கட்டுப் பாட்டாளரான தமயந்தி கருணாரத்ன இதனை தெரிவித்தார். (நி-5)

## கனடா ஏரியில் மூழ்கி இலங்கை மாணவன் பலி

(கொழும்பு)

இலங்கை மாணவர் ஒருவர் கனடாவில் ஏரியில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி குறித்த இளைஞர் உயிரிழந் துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இவர் வைட் ஏரியில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் தோம்சன் றிவர்ஸ் பல்கலைக்கழகத்தில் பயிலும் இலங்கையைச் சேர்ந்த அனுராத குடாகொட என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 130 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 170 | 180 | 170 | 200 |
| கரட் | 180 | 170 | 160 | 200 |
| பூசணி | 100 | 90 | 90 | 120 |
| புடோல் | 80 | 80 | 70 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 170 | 200-250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100-120 | 120 |
| பாகற்காய் | 250 | 400 | 380 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 100 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 200 | 280 | 240 | 250 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 280 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 300 | 280 | 350 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | — | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60-80 | 40-70 |
| இராசவள்ளி | — | — | — | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | 170 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | 40 | 20-30 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வீராதி வீரன்

“நம் தலை நகரத்தை அடுத்துள்ள காட்டில், கொடிய பூதம் ஒன்று உள்ளது.

அதைக் கொல்வதற்காக எத்தனையோ வீரர்கள் சென்றனர். யாருமே உயிருடன் திரும்பியதில்லை,” என்றார் அரசர்.

“அரசே! இப்படிப் பட்ட பெரிய சோதனையைத்தான் எதிர் பார்த்தேன். என் வீரத்தைக் காட்ட நல்ல வாய்ப்பு. அந்தப் பூதத்தைக் கொன்று அதன்தலையை எடுத்து வருகிறேன். எனக்கு என்ன பரிசு தருவீர்கள்?”

“எந்த வீரனாலும் செய்ய முடியாத செயல் இது. நீ அந்த பூதத்தைக் கொன்றால் இளவரசியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்,” என்றான் அரசன்.

“பூதத்தின் தலையுடன் வருகிறேன்,” என்று காட்டிற்குப் புறப்பட்டான்.

“அந்தப் பூதத்தை வாளால் வெட்டி வீழ்த்த முடியாது. அதைக் கொல்ல என்ன செய்வது?” என்ற சிந்தித்த படியே காட்டுக்குள் நடந்தான் பால்பாண்டி.

தன்கையிலிருந்த வெண்ணெயை உருட்டினான் அவன். அது பந்து போல ஆனது. பார்ப்பதற்கு வெண்ணிற கூழாங்கல்லைப் போலக் காட்சி தந்தது. அதைச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அவன் அருகே குருவி ஒன்று பறந்து சென்றது.



அதைப் பிடித்த அவன் அதையும் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். அங்கிருந்த உயரமான மரம் ஒன்றைப் பார்த்தான். அதில் ஏறி அமர்ந்து கொண்டான். இந்த வழியாகப் பூதம் வரும் என்று காத்திருந்தான். சிறிது நேரம் சென்றது.

மலை அசைந்து வருவது போலப் பெரிய பூதம் ஒன்று அங்கு வந்தது. அதன் தோற்றமே பயங் கரமாக இருந்தது. பூதத்தைப் பார்த்த அவன் நடுங்கினான்.

மூக்கை உறிஞ்சிய அது, “ ஆ! மனித வாடை அடிக்கிறது. எனக்கு நல்ல விருந்து கிடைத்தது. நீ எங்கே இருக்கிறாய்?“” என்று மகிழ்ச்சியுடன் கத்தியது.

“அந்தப் பூதம் என்னைக் கண்டுபிடித்து விடும். ஏமாற்றித்தான் அதனிடமிருந்து தப்ப வேண்டும்” என்று தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்டான். (தொடரும்)

# மகாபாரதம்


148

திலீபன் என்னும் மன்னன் புகழை உலகம் போற்றுகிறது. அவன் யாகத்தின்போது பொன்னாலான யானைகளைத் தானமாக அளித்தான். இந்திரன் முதலான தேவர்கள் அவனை வழிபட்டனர்.

அவன் முன்னால் ஆயிரம் ஆயிரம் தேவர்களும் கந்தர்வர்களும் நடனம் ஆடினர். அவன் அவையில் வசு என்னும் கந்தர்வன் வீணை வாசித்தான்.

அந்த வீணையிலிருந்து எழும் இனிய ஒலி கேட்டு உயிரினங்கள் மகிழ்ச்சி அடைந்தன.

அவனது நாட்டில் தங்கக் கவசம் பூண்ட யானைகள் மதம் பிடித்து எங்கும் திரிந்தன. அந்தத் திலீபனும் இறந்து விட்டான் எனில் உன் மகன் இறந்ததற்கு ஏன் அழுகிறாய்.



ராமனும் சீதையும்

மூன்று உலகங்களையும் வெற்றி கொண்ட மாந்தாதா என்னும் மன்னனும் மாண்டு போனான்.

குழந்தையாக தேவ வடிவத்தில் தன் தந்தையின் மடியில் படுத்திருந்த போது இந்திரன் “இந்த [illegible]” என தன் கை விரலை அதன் வாயில் வைத்து பால் பெருகச் செய்தான்.

அந்தப் பாலின் சக்தியால் மாந்தாதா பன்னிரெண்டு நாட்களிலேயே வளர்ந்து வாலிபன் ஆனான்.

ஆற்றல் மிக்க அவன் பூமி முழுதும் வென்று தனதாக்கிக் கொண்டான்.

அவன் அங்காரகன் என்னும் அரசனை எதிர்த்துப் போர் செய்கையில் எழுந்த நாண் ஒலியால் தேவலோகம் இடிந்து விழுமோ எனத் தேவர்கள் நடுங்கினர்.

அவன் நூற்றுக்கும் மேலான அசுவமேத யாகங்களையும் ராஜசூய யாகங்களை யும் செய்தான்.அவன் ஆயுளும் ஒருநாள் முடிந்தது.

நகுஷன் மகன் யயாதி புகழ் வாய்ந்தவன். பூமி முழுதும் யாகசாலையாக மாற்றியவன் அவன்.

அவன் தங்க மலைகளைத் தானம் செய்த பெருமை மிக்கவன். அவன் காட்டை அடைந்து தவம் இயற்றி மாண்டு போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.

*– ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாலுக்காக அழுத குழந்தைகளால் உலக நீதியும் தழைக்கும்! மகாயுத்தமும் நடக்கும்!

தமிழில் **பால்** என்ற சொல் பெறும் மாண்பு சொல்லிமாளா. பால் என்ற ஈரெழுத்துச் சொல் பார்வதி பரமேஸ்வரன் முதல் பாமர மக்கள் வரையில் ஏற்றிப் போற்றப்படுகிறது.

அதனாலோ என்னவோ தேவாரத்திரு முறையில் வாழ்த்துப் பாடிய ஞானசம்பந்தர் வாழ்க; அந்தணர், வானவர், ஆனினம்... என்றார்.

அந்தணர்கள் வாழ வேண்டும். வானவர்களாகிய தேவர்கள் வாழ வேண்டும். பால் தருகின்ற ஆனினமாகிய பசுக்கள் வாழ வேண்டும் எனக் குறித்துரைத்தார்.

ஆக, அந்தணர்கள், தேவர்கள் என்ற வரிசையில் கோமாதாவை வைத்துப் போற்றுவதில் இருந்து பசுவின் முக்கியத்துவம் உணரப்படும்.

என்ன செய்வது, இப்போதெல்லாம் புட்டிப் பால் இல்லையேயென்று நம்மவர்கள் பெருந் துயர் கொண்டுள்ளனர்.

பால்மா இல்லாத காரணத்தால் குழந்தைகள் பாலுக்காக அழுகின்றனர்.

தவிர, குழந்தைகள் என்ன காரணத்துக்காக அழுதாலும் பால் கொடுத்து அவர்களின் அழுகையைப் போக்குவது இயற்கை நமக்குத் கற்றுத்தந்த பாடம்.

ஆம், ஞானசம்பந்தக் குழந்தை தோணிபுரத்தில் இருந்து அழுகிறது. சீர்காழி உறை அம்மை அப்பன் வெள்ளை எருதேறி வந்து சம்பந்தக் குழந்தைக்குப் பால் கொடுக்கின்றனர்.

ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தக் குழந்தையால், மேன்மைகொள் சைவ நீதி உலகமெங்கும் விளங்கியது.

இதேபோல் துரோணச்சாரியாரின் குழந்தைகள் பால் வேண்டி அழுதனர். தன் குழந்தைகளின் பசி தீர்க்க தன் பள்ளி நண்பன் பாஞ்சாலனிடம் துரோணர் செல்கிறார்.

என் குழந்தைகள் பால் வேண்டி அழுகின்றனர். ஒரு பசுமாடு தந்தருள் எனக் கேட்கிறார் துரோணர்.

கர்வம் கொண்ட பாஞ்சாலன் தரமுடியாது என திமிர் காட்ட, கோபமுற்ற துரோணர் தன் மாணவன் அருச்சுனனைக் கொண்டு பாஞ்சாலனை சிறையிட்டு அவமானப்படுத்துகின்றார்.

அதன் விளைவு மகாபாரதப் போராயிற்று.

அன்று துரோணருக்கு ஒரு பசு மாட்டை பாஞ்சாலன் கொடுத்திருந்தால், மகாபாரதப் போர் நடந்திருக்க வாய்ப்பில்லை.

ஆக, பால் வேண்டி குழந்தைகள் அழுதால் அஃது உலகில் நீதி தழைக்கவோ அன்றி மகா யுத்தம் நடக்கவோ காரணமாகலாம்.

ஆகையால் பால் இல்லை என்று அழுகின்ற குழந்தைகள் விடயத்தில் அசமந்தம் செய்துவிடாதீர்கள்.

வீட்டுக்கு ஒரு பசு வளர்த்தால் அந்த வீட்டில் உள்ள அத்தனை பேருக்கும் பசும்பால் கிடைக்குமல்லவா!

இதன் பிறகு புட்டிப்பால் வந்தாலென்ன? விட்டாலென்ன?

# சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அதிக எண்ணிக்கையிலான பக்தர்களை அழைத்து அன்னதானம் வழங்கியதால் சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலினால் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் நேற்று பிற்பகல் அறிவித்தல் ஒட்டப்பட்டு ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் வருடாந்தர பெருந்திருவிழா நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. சுகாதாரக் கட்டுப்பாடுகளின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் திருவிழாக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகலுக்குப்பின் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கட்டுப்பாடுகளை மீறி அதிகளவானோரை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்து அன்னதானம் வழங்கியமையால் மேற்படி ஆச்சிரமம் பொதுச் சுகாதார பரிசோதகரினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலய சூழலில் அமைந்துள்ள கடைகளில் உள்ளோர் பி.சி.ஆர் பரிசோதனை எடுக்கும்வரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் அறிவுறுத்தப்பட்டது. (4-7-33)

## முள்ளியவளையில் விபத்து; ஒருவர் காயம், இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் காலை வீதியின் விதி முறையினை மீறி தரித்து நின்ற சொகுசு காரின் கதவினை திறக்க முற்பட்டபோது உந்துருளியில் பயணித்த இருவர் காரின் கதவில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி மறுபக்கத்தில் பயணித்த நோயாளர் காவு வண்டியில் மோதுண்டு காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் விபத்தினை ஏற்படுத்திய நோயாளர் காவுவண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்திற்கு காரணமாக இருந்த சொகுசுக் காரின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர். விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை வீதி போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-281)

## வவுனியாவை சேர்ந்த முன்னாள் அரசியல் கைதிக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவு அழைப்பாணை

(வவுனியா)

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவருக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி) நேற்று அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்மன் என்பவரையே எதிர்வரும் 10ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, விசாரணையை மேற்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்புப் பிரிவு வவுனியா கிளைக்கு சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 8 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அன்னை கடல் உணவு நாவாந்துறை, அண்ணாமலையார் ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைசஸ், எவகிறீன் அச்சகம், ஹரிகணன் பிறைவேற் லிமிட்டெட், சுகாதார அமைச்சு பண்ணை, சிறை வளாகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம் கோட்டை, அரசடி வீதி சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, கலட்டி பிறவுண் வீதி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, நாவலர் வீதி காரைநகர் வீதி சந்தி, பண்ணை, தட்டாதெரு, கே.கே.எஸ். வீதி சந்தி, வில்லூன்றி ஆறுகால்மடம், சுகந்த் இன்டர்நஷனல் காக்கைதீவு, கல்வியியற் கல்லூரி கோப்பாய், கோப்பாய் இராணுவமுகாம், கிருஷ்ணன் கோவிலடி, இராஜவீதி சந்தி, இராஜவீதி கோப்பாய் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** நன்னீர் மீன் உற்பத்தி நிலையம், இரணைமடு விமானப்படை, வட்டக்கச்சி பண்ணை, கறுப்பிக்குளம், கோவிந்தன் கடைச்சந்தி, மாயவனூர், பன்னங்கண்டி இராமநாதபுரம், சின்னச் சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம் ஆகியபிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## மனச்சுத்தம் மிக அவசியம்

❖ ஒரு செயலின் பயனில் கருத்து செலுத்துவது போல, அதைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்துங்கள்.

❖ உலகிற்கு நன்மை செய்யும் ஒவ்வொரு முறையும் நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

❖ மனத்தூய்மையுடன் இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதுமே வழிபாட்டின் சாரம்.

❖ ஏழை,பலவீனர்கள், நோயாளிகளிடம் இறைவனைக் காண்பவனே உண்மையான பக்தன்.

❖ எப்போதும் உற்சாகத்துடன் இருப்பது தான் ஆன்மிக வாழ்வில் ஈடுபடுவதற்கான முதல் அறிகுறி.

❖ உயர்ந்த எண்ணத்தைச் சிந்திக்கும் மனிதனால் அற்பமான விஷயங்களில் ஆர்வம் ஏற்படுவது இல்லை.

❖ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

❖ நல்லொழுக்கத்தால் தெய்வீக உணர்வும், தீயொழுக்கத்தால் மிருக உணர்வும் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—317

# புற்றுநோயும் புரியாத புதிரும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலகளாவிய ரீதியில் தற்போது அனைத்து மக்களையும் அல்லோலகல்லோலப்படுத்திக் கொண்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணங்கியான வைரஸின் வீரியத்தைக் கண்டு அனைவருமே பிரமித்துப் போயிருக்கின்றோம். கட்டுப்படுத்தி வெற்றி கண்ட நாடுகளில் மீண்டும் கொரோனா வேறு பெயர்களில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அவுஸ்திரேலியாவில் சிட்னி, குயீன்ஸ்லண்ட் என பல நகரங்கள் மீண்டும் முழுவடைப்புக்குள் வந்திருக்கின்றன.

இந்த வைரஸ் மட்டுமல்ல இனி வரப்போகின்ற இவ்வாறான வைரஸ்‌க்களை முழுமையாகக் கட்டுப்படுத்தல் என்பது மிகவும் சவாலாகவே இருக்கும் என எதிர்வுகள் கூறுகின்றன.

அப்படியாயின் இதற்கு முடிவு தான் என்ன என கிராமத்து பெரியவர் விளித்தார். இதற்கு பதில் என்று எதுவும் கூறமுடியாத நிலையில் வருமுன் காப்போம் என்பதனைத்தான் தற்போது பதிலாக எமக்குள்ளே நாம் சொல்லிக் கொள்ள முடியும்.

எமது சுகாதாரத்தையும் எமது குடும்ப சுகாதாரத்தையும் நாமே மிகவும் அவதானிப்புடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும். தவறின் விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்துவிடும். கொண்டாட்டங்களை சுருக்கி அமைதியாக அளவாக செய்து முடித்து அனைவரையும் பாதுகாத்தல் அவசியமாகும்.

விதம்விதமான நோய்கள் பரவி எம்மை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் தொற்றும் நோய்கள் என்னும் வகைக்குள் அடங்குகின்றன. கறுப்பு பூஞ்சை என்னும் கன்டிடா வகைப் பூஞ்சணம் மனிதர்களில் தொற்றுதலாகிக் கொண்டிருக்கின்றது என்னும் செய்தியும் அனைவரையும் மீண்டும் திகிலடையச் செய்திருக்கின்றது. இவ்வாறாக தொற்றும் நோய்கள் பல புதிது புதிதாக வெளிவந்து மனித குலத்திற்கு சவாலாக மாறிக் கொண்டேயிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க தொற்றாத நோய்களான பலவகையான நோய்களுள் புற்றுநோயும் வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இருபாலாரையும் பாதிப்புக்குள்ளாக்கி பல நோயாளர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான தொற்றா நோய்களும் நம்மவர்களை மிரட்டத்தொடங்கி விட்ட நிலையில் இதற்கான முழுமையான தீர்வினை கண்டு பிடித்தேயாக வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகும். புற்றுநோயின் தாக்கத்திற்கு ஆளாகும் அனைத்து மக்களும் ஏதோ ஒரு வகையில் இறுதியில் மனவுளைச்சலுக்கும் உள்ளாகின்றதனை காண முடிகின்றது. எந்த வகையான நோயானாலும் எதிர்க்க துணிதல் அவசியம். அந்த நோய்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதனை நாம் அவர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முன்னைய காலங்களைப் போலல்லாது தற்போது விஞ்ஞான தொழில்நுட்பம் பல மடங்கு அதிகரித்திருக்கின்ற நிலையில் இவ்வாறான நோய்களினை இன்னதென்று இனங்காணவும் அதன் மூலம் இந்நோய்களுக்கான பரிகரணத்தை செய்யவும் வசதிவாய்ப்புக்களை பரிசீலனை செய்தல் அவசியம். மருத்துவத்துறையின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி மக்களை எந்த வகை நோய்களிலிருந்தும் காப்பாற்றும் வாய்ப்புக்களை அதிகரித்திருக்கின்றது எனலாம்.

புற்றுநோயின் வகையைப் பொறுத்து அதிலிருந்து தப்பிப்பதற்கான பரிகரணத்தை விரைந்து செய்ய முடியும். புற்றுநோயானது பலவகைக்காரணிகளிலிருந்து உருவெடுக்கின்றது என்பது இயல்பாயினும் இன்னதென காரணம் தெரியாத பலவகையான புற்றுநோய்களும் இனங்காணப்படுகின்றன. எம்மவர்களை பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றன. காரணங்களை அலசி ஆராய்ந்தால் சரியான காரணத்தை குறிப்பிட்டுக் கூற முடியாத புற்றுநோயாளர்களைத்தான் காண முடிகின்றது.

எமது வாழ்க்கை முறை, உணவுப்பழக்க வழக்கங்கள் கூட இதற்குக் காரணமாக அமைகின்றன என்பதனை ஏற்றுக்கொள்வதற்கு மருத்துவ உலகம் தயாராக இல்லையென்றாலும் எதனால் புற்றுநோய் உருவானது என்பதற்கு சரியான பதிலை காண முடியாதிருக்கின்றது.

இதிலொரு வகையான கருப்பைப் புற்றுநோய் பல பெண்களுக்கு அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகி வருவதனை அன்றாடம் காண முடிகின்றது. ஆண்களைப் போலல்லாது பெண்களின் இனப்பெருக்கத் தொகுதியின் அமைப்பும் அதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் புற்றுநோய் உருவாவதற்கான அதிகரித்த வாய்ப்பாக அமைந்திருப்பதனை காணலாம்.

இணையத்தில் தேடியபோது பின்வரும் நிலைமைகள் கருப்பைப் புற்றுநோய் உருவாவதற்கு வாய்ப்பாகலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தாய்மையடையாதவர்கள், வயதானவர்கள், மிகவும் அளவுக்கு மேலான பருமனாக இருப்பவர்கள், பரம்பரையாக இந்நோய் கண்டவர்கள், நீண்ட வருடங்களாக இருக்கும் மாதவிடாய், ஈஸ்ரஜன் மற்றும் புரோஜஸ்ரரோன் ஓமோன்களின் சமனிலையில் ஏற்படும் மாற்றம் என பலவகையான காரணங்களை இனங்கண்டிருக்கின்றார்கள்.

இவற்றுள் பெண்மைக்கான ஈஸ்ரஜன் மற்றும் புரோஜஸ்ரரோன் ஓமோன்களின் சமனிலையில் ஏற்படும் மாற்றம் முதன்மைக் காரணமாக குறிப்பிடப்படுகின்றது. இந்த ஓமோன்களின் சமனிலையைக் குழப்புகின்ற அல்லது மாற்றியமைக்கும் காரணிகளை தேடியபோது அதில் உணவுடன் உள்ளெடுக்கப்படும் அசேதன இரசாயனங்களும் இதற்கொரு காரணமாக இருக்கின்றதனை காணலாம். இதில் தான் நாம் மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டியிருக்கின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான காரணங்களைத் தவிர்த்துப் பார்த்தால் உணவுடன் உள்ளெடுக்கப்படும் அசேதன இரசாயனங்களால் ஈஸ்ரஜன் மற்றும் புரோஜஸ்ரரோன் இனது சமனிலை பாதிக்கப்படுகின்றது என ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

அதனால் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்றே கூறப்படுகின்ற நிலையில் நாம் உள்ளெடுக்கும் உணவு நஞ்சான உணவாக இருக்கும் பட்சத்தில் நாமாகவே இவ்வாறான நோய்களை எமக்குத்தெரியாமலே உள்வாங்க காரணமாயிருக்கின்றோம். உள்வாங்கும் அசேதன இரசாயனப் பதார்த்தங்களினால் எமக்குள்ளேயே புற்றுநோய் உருவாவதற்கான சூழமைவை நாம் ஏற்படுத்தி விடுகின்றோம். வெறுமனே மரக்கறி மட்டும் உணவாகக் கொள்பவருக்கு புற்றுநோய் வருகின்றதென்றால் அவர்களின் உணவிலே உள்ள இரசாயனங்களால் இப்படியொரு நிலை வருவதற்காக சாத்தியம் அதிகமே.

இதனை ஆய்வின் முடிவாக அறிவிக்காதவரை விஞ்ஞான உலகம் எதனையும் நம்பப்போவதில்லை. மறுத்தும் கூறிக் கொண்டேயிருக்கும். இது அசேதன இரசாயனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு சார்பானதாகவே இருக்கும்.

நாம் உண்ணுகின்ற உணவில் அசேதன இரசாயனங்களின் கலப்பு இல்லை என்பதற்கு பல ஆயிரங்கள் செலவழித்து நாம் மாதிரிகளை எடுத்து பரீட்சிக்க வேண்டும்.

இது பற்றி இன்னும் ஆராய்ந்து எமது மக்களுக்கு இந் நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. அது சார்பான ஆய்வுக்கட்டுரைகளை உதவிக்கழைத்து இதுபற்றி விரிவாக தகவலை உங்களுக்கு தரவிருக்கின்றோம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 330




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த மாதத்தில்...

டன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில், நாடு பூராகவும் 120 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்தது 1,500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றாது இவ்வாறு பொதுமக்கள் ஒன்றுகூடுவது, நாடு பூராகவும் வேகமாக கோவிட் நோய்த் தொற்று பரவுவதற்கு காரணமாகியுள்ளதென்று, புலனாய்வுத் துறையினர் சுட்டிக் காட்டினர். (ம-3)

## 100 - 2...

டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,919 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வெளிநாடு...

பைஸர் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

பைஸர் தடுப்பூசி வெளிநாட்டுக்கு கல்வி விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாவில் செல்வோருக்கு மட்டுமே வழங்கப்படும்.

தங்களுடைய விசா தொடர்பான உறுதிப்படுத்தல்களை சுகாதார பிரிவினருக்கு வழங்கினால் கொழும்பில் தடுப்பூசி வழங்கப்படும்என பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-3)

## யாழ் - 66...

யாழ்.பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 603 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் 38 பேர் உட்பட வடக்கில் 65 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் மேலும் 28 பேர் உட்பட 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கட்டுப்பாட்டை...

சங்கம் எச்சரித்துள்ளது.

பெரும்பாலான சுகாதாரத் துறை ஊழியர்களும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.

எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகள் மற்றும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வழக்கத்திற்கு மாறாக அதிக எண்ணிக்கையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அடுத்த இரண்டு வாரங்களில் தினசரி நோய்த் தொற்றாளர்கள் அதிக எண்ணிக்கையில் அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள். ஒரு கட்டத்தில் மருத்துவமனைகளால் கையாள முடியாது.

கடந்த சில நாட்களில் எட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## தற்காலிக...

தின்போது இளம் குடும்பம் ஒன்றின் தற்காலிக வீடு முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகியுள்ளது. (ம-3,281)

## காட்டு ஆட்சி...

யப்படுவது குறித்து தேசிய மக்கள் சக்தியின், பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் அதில் ஈடுபட்டோர், வீடுகளில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது, முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரே பேருந்துகளில் ஏறி ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தனர்.

அதேநேரம் பல பல்கலைக்கழக மாணவர்களை வெள்ளை வான்களில் வந்த சீருடை அணியாத பொலிஸார் கடத்திச் சென்றனர்.

அரசாங்கம் ஒரு ஆட்சியைப் போன்று செயற்படவில்லை, காட்டு ஆட்சியாளர்களைப் போலச் செயற்படுகிறது. இது நிறுத்தப்பட வேண்டும். கைது செய்யப்பட்டால், அது சரியான வழியில் செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கருத்துரைத்த பொதுப்பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸாரின் செயற்பாட்டில் தாம் செல்வாக்கைப் பிரயோகிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நாடு முடங்காது...

யாடலைத் தொடர்ந்து, நாடு முடக்கப்படாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று இராணுவ தளபதியும் கொரோனா ஒழிப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் 500 இருக்கைகள் கொண்ட திருமண மண்டபங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும்

அத்துடன் 500 இருக்கைகளுக்கு குறைந்த திருமண மண்டபங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 100 பேர் மாத்திரம் கலந்து கொள்ள முடியும்.

மரண வீடொன்றில் ஒரு சந்தர்ப்பத்தில் 25 பேர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## கோட்டா...

மேலும் பேசுகையில்,

"அரசு வெற்றி பெற்று இன்றுடன் (நேற்று) (ஓகஸ்ட் 6) ஒரு வருடம் ஆகின்றது. இப்போது நாடு என்ன நிலைமையில் இருக்கின்றது? சௌபாக்கியம் இல்லாத நிலைக்கு நாடு போயுள்ளது.

மக்கள் செத்து வீழ்கின்றனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. மக்கள் செத்துகொண்டிருக்கையில், வைத்திய சாலைகளில் கட்டில்களுக்குக் கீழே மக்கள் இருக்கும் இந்த நேரத்தில் நாங்கள் இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இந்த பாராளுமன்றத்தின் மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹண திஸாநாயக்க, திஸ்ஸ குட்டியாராச்சி உள்ளிட்டோருக்குக் கொரோனா தொற்றியுள்ளது. இன்னும் பலர் கொரோனாத் தொற்றுடன் இருப்பர்.

இந்த அரசு சௌபாக்கியம் தொடர்பில் ஒரு வருடத்துக்கு முன்னர் கூறியது. நாட்டைப் பாதுகாக்கும் வீரரைக் கொண்டு வருவோம் என்று கூறி ஒரு வீரரைக் கொண்டு வந்தனர். இப்போது அந்த நாட்டைக் காக்கும் வீரரிடம் இருந்து நாட்டைக் காக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார். (ம-3)

## மக்கள் போராட்...

ஆர்வலர்களைக் கைது செய்வது அதன் ஒரு படியாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

உ
நாகபூசணி அருளுடன்
அதிரடி வெற்றிப் பரிசுகள் அடுத்தடுத்து யாழ். நகரில்

05.08.2021 மகஜன சம்பத 20 இலட்சம் (2 மில்லியன்) NLB
04.08.2021 சசிரி ஒரு இலட்சம் ஒரே நாளில் 02 DLB
02.08.2021 சனிக்கிழமை அதிர்ஷ்டம் 10 இலட்சம் (1 மில்லியன்) DLB

யாழ். நகர் முகவர்கள்
கனகலிங்கம் திலகவதி
வெற்றிப் பரிசுகளை நீங்கள் தட்டிச்செல்ல இன்றே!
யாழ்ப்பாணம், யாழ். மீன் சந்தை, சின்னக்கடை, திருநெல்வேலி, பாசையூர் மற்றும் மோட்டார் சைக்கிள் விற்பனை, துவிச்சக்கரவண்டி விற்பனையாளர்களிடம் பெற்று வெற்றியாளராக வாழ்த்துபவர்கள் :
தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ். வெற்றி முகவர்கள், (7586)
S. கனகலிங்கம் திலகவதி
இல. 04, K.K.S வீதி, யாழ்.நகரம்.

தன நிதானய
திகதி - 2021.08.06
சீட்டிழுப்பு இலக்கம் - 558
K 28 49 63 67
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 06.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2823
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 13 20 41 72
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/08/06
சீட்டிழுப்பு இலக்கம் 4528
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 7 4 1 7 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/08/06
1608 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 16 38 50 54
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 06/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0876
வெற்றி எழுத்து W
சுப்பர் இலக்க 04
வெற்றி இலக்கங்கள் 04 05 19 58

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1331
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 06.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,612,830
வெற்றி இலக்கங்கள் 03 55 59 63
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3666
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 06.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,366,452.80
வெற்றி இலக்கங்கள் 02 06 46 65
ஆங்கில எழுத்து X
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 3,874,556/=
திகதி : 06.08.2021
வெற்றி வாரம் : 3217
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 09 22 24 29
ரிஷபம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,810,360/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1505
நிறம்
சீட்டிழுப்பு திகதி 06/08/2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 13 18 36 69
அடுத்த சுப்பர் ஜக்பொட 62,247,513/=
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 740
வர்ணம்
திகதி 06.08.2021
வெள்ளிக்கிழமை
U 13 18 55 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,036,220
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

தாவடி/ இணுவில்/ உடுவில்/ சுன்னாகம்/ மானிப்பாய்/ உரும்பிராய்/ சாவகச்சேரி பகுதிகளில் நல்ல சூழலில் உடனடியாக வீடு வாடகைக்கு தேவை.

077 284 7850 (7580)

## மணமகள் தேவை

7 இல் செவ்வாய் குற்றமுள்ள மணமகள் தேவை. விபரங்கள் பேசிக்கொள்ளலாம். (C-2469)

Viber 0041779246314 (தரகர்)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-2475)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com


# 30 வயதுக்கு மேற்பட்டோர் எந்தவொரு இடத்திலும் கோவிட் முதலாவது தடுப்பூசியை பெறலாம்

## சுகாதார பிரிவுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

தற்போது இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படும் எந்தவொரு தடுப்பூசி மையத்திலும், 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பிரிவினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றல் மற்றும் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் கோவிட் தடுப்பு விசேட செயலணியுடன், நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கோவிட் தொற்று அறிகுறிகள் காரணமாக, கொழும்பு உள்ளிட்ட சில பிரதான நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் செல்கின்ற நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளன.

(ம-03)


## The Biryani hub

NORTH INDIAN CUSINE

நோர்த் இந்தியன் ஸ்டைல் தம்பிரியாணி வகைகளை மதியம் 12 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| முட்டைப் பிரியாணி | - 350/= |
| வெஜிடபிள் பிரியாணி | - 400/= |
| சிக்கன் தம்பிரியாணி | - 550/= |
| சிக்கன் ரோஸ்ட் பிரியாணி | - 550/= |
| மட்டன் பிரியாணி | - 750/= |

077 908 1886
இல. 1544, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில். (C-2474)

## மணமகன் தேவை

8 இல் செவ்வாய் உள்ள மணமகன் தேவை. விபரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும். (C-2470)

தொடர்பு 0041779246314

## UK-STUDENT VISA

லண்டன்

A/L எடுத்த மாணவர்கள் மற்றும் DIPLOMA/DEGREE முடித்த மாணவர்கள் குறைந்த செலவில் இங்கிலாந்தில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2476)

WHY UK IS A POPULAR STUDY DESTINATION?

IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
0777-068-777

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-2439)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை | பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை | மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்தில் இருந்து 400 மீற்றர் தூரம். (7576)

பார்வையிடும் நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை.

1 1/2 பரப்பின் விலை 10 இலட்சம்

077 814 7389, 077 614 7333

## பணிப்பெண் தேவை

2 1/2 வயதும், 7 மாதம் நிரம்பிய இரு குழந்தைகளை மட்டும் பராமரிப்பதற்கு யாழ். நகரில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய 35 - 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.

சம்பளம் - 35,000/= (7589)

075 498 5400
077 937 0000

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-2438)

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமணப் பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

சுகாதார விதிமுறைகளை பின்பற்றவும்.

ஆகஸ்ட் 05 முதல்
ஆகஸ்ட் 23 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

ஆடி SALE

றொப் - 500/=, 850/=, 1000/=
சல்வார் துணி - 850/=, 1,000/=, 1,500/=
சல்வார் - 1,000/=, 1,500/=, 2,000/=




சாறிகளுக்கு விலைக் 10% கழிவு

பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துனிகள், பொப் வகைகள் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (C-2472)


# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 05 - 1933



இறப்பு 01 - 08 - 2021

## திரு. குணரத்தினம் கார்த்திகேசு

**Retired Asst. Director of Agriculture, North - East Province, Sri Lanka.**
**National Consultant UN / FAO - Sri Lanka.**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் சிட்னி அவுஸ்திரேலியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. குணரத்தினம் கார்த்திகேசு கடந்த 01.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் ஏக புதல்வரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் கருணேஸ்வரியின் அன்புக் கணவரும் சுரேகா, சுரேந்திரா, பாலேந்திரா, சத்தியேந்திரா, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகுமார், நிக்கி, ஹேமலதா, ஹொங், சோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, மகேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம், லீலாநந்தேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ரெட்ணேஸ்வரி, காலஞ்சென்ற தனலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகலனும் Dr சரணியா, ஷோபியா, சரண், ரூபேஷ், ஆதேஷ், சொபியா, ரயன், சனந்தேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

Lanka Sri RIP book ஊடாக இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்துவதுடன் இறுதி நிகழ்வையும் பார்வையிடலாம்.

கிரியை மற்றும் தகனம்
09 Aug. 2021 (Monday)
Time : 9:00 AM - 11:45 AM (Sydney Time)

Magnolia Chapel
Macquarie Park Cemetry and Crematorium
Cnr Delhi and Plassey Roads,
North Ryde NSW 2113

சுகுமார் : +447789681407
சுரேந்திரா : +61447246857
பாலேந்திரா : +61490778630
சத்தியேந்திரா : +61488038639
கஜேந்திரா : +61403112031

(7590)

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.